

# ஞானச்சுடர்

ஐப்பசி

மலர் 2006





ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



உ

# குறள்வழி

**அல்லவை நேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்.**

**பொருள்:** நன்மைதரும் சொற்களைஆராய்ந்து ஒருவன் இனிமையாகச் சொல்லுவானாயின், பாவங்கள் கெட்டுத் தருமம் வளரும். (96)



## நற்சிந்தனை


### உண்மை முழுதும்

### வெண்பா

உண்மை முழுதுமென் ஓது மொருமொழியால்
என்னை மறந்தேன் இடரகன்றேன் - பின்னையிங்
காச்ச ரியங்காணேன் அண்டபிண்ட மெல்லாமே
போச்சுதொன் றாகப் புகல்

ஆறுங் குளனும் அருவரையுஞ் சோலைகளுஞ்
சேரு மிலங்கைச் சிவனடியீர் - கூறுஞ்
சிவதொண் டனைக்காக்கச் சிந்தைவேண் டாவோ
அவற்குத் துணையா ரறை.

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டு பேரவை

# ஞானச்சுடர்

வெளியீடு – உ சுடர் – 106

## 2006 ஐப்பசி
## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| இறைவழிபாட்டில் கேடுவிளை.. | நீர்வைமணி | 1 - 2 |
| அன்பரும் அன்பனும் | க. சிவசங்கரநாதன் | 3 - 6 |
| சிவனருள் ஆட்சியில்.... | ஆ. கதிர்காமத்தம்பி | 7 - 9 |
| திருக்கைலாய வரவேற்பு... | சு. தயாமதி | 10 - 13 |
| யாழ் வடமராட்சியில் தானே.... | கே.கே. யோகேந்திரன் | 14 - 16 |
| தவமுனிவனின் தமிழ்மந்திரம் | சிவ. மகாலிங்கம் | 17 - 21 |
| கந்த ஷஷ்டி விரதம் | ச. சரவணமுத்து | 22 - 25 |
| தெய்வச் சேக்கிழார் பெருமான்... | பா. சிவனேஸ்வரி | 26 - 29 |
| காளாத்திக் கடவுளுக்கு | சிவ சண்முகவடிவேல் | 30 -31 |
| தவத்திரு ஸ்ரீமத் சோமாஸ்..... | ஆர்.வீ. கந்தசாமி | 32 - 35 |
| முன்னோர் சொன்ன கதைகள் | சி. யோகேஸ்வரி | 36 - 37 |
| நெஞ்சக் கனகல் | ச. லலீசன் | 38 - 40 |
| அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர் | தி. வரதவாணி | 41 - 43 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 44 - 48 |


**அன்பளிப்பு:-**

மலர் ஒன்று 30/= ரூபா
வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை
**தொலைபேசி இலக்கம்:- 021- 2263406**
**பதிவு இல. Q.D./33/NEWS/2006**

**அச்சுப்பதிப்பு:-** **சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.**

*ஞானச்சுடர்*

# புரட்டாதி மாத வெளியீடு

**வெளியீட்டுரை**

105வது சுடருக்கான வெளியீட்டுரை ஆசிரியர் இரா. ஸ்ரீநடராசா அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் விஷேடமானதும், வித்தியாசமானதுமான பல அம்சங்களைக் கொண்டு விளங்குகின்றது. அன்னதானத்தை வழங்குகின்ற ஏராளம் மடங்களை இவ்வாலயம் கொண்டுள்ளது. அவற்றில் நன்றாக செயற்பட்ட ஆனந்தாச்சிரமத்தின் குழந்தையாக பிரசவிக்கப்பட்டதே சந்நிதியான் ஆச்சிரமம் ஆகும்.

இந்த ஆச்சிரமம் அன்னதானத்தை மட்டும் வழங்காமல் சமுதாயத்தின் நலன்புரி நிலையமாகவும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது எல்லாவற்றிற்கும் மேலாக இந்த ஞானச்சுடர் சஞ்சிகையை தொடராக வெளியிட்டுக் கொண்டிருப்பது மிகவும் மகத்தான பணி என்பதை ஆசிரியர் இரா. ஸ்ரீநடராசா அவர்கள் எடுத்துக்காட்டினார்கள்.

ஆச்சிரமத்தில் வழங்கப்படும் அன்னதானம் பசிப்பிணியை மட்டும் போக்கவில்லை அது உடற்பிணியையும் போக்கவல்லது. அதேபோல இந்த ஞானச்சுடர் சஞ்சிகையும் எம்மில் மறைந்துள்ள அறியாமையைப் போக்கி ஞானத்தை வளர்க்க உதவுகின்றது என்பதையும் எடுத்துக் கூறினார்கள்.

**மதிப்பீட்டுரை**


மலருக்கான மதிப்பீட்டுரை ஆசிரியர் துரை. கணேசமூர்த்தி அவர்களால் மேற்கொள்ளப்பட்டது நாம் இன்று பல்வேறு வகையான பாதகமான சூழ்நிலைகள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனாலும் இந்த பாதகமான சூழ்நிலைகளால் ஏற்படுகின்ற தடைகளையும் தாண்டி ஆச்சிரமத்தினாலும், பேரவையினாலும் செயற்படுத்தப்படுகின்ற செயற்பாடுகள் அனைத்தும் சிறப்பாகவே இடம்பெற்றுக்கொண்டிருப்பதை ஆசிரியர் துரை கணேசமூர்த்தி அவர்கள் எடுத்துக்காட்டினார்கள்.

எமது சமயம் தர்மத்தின்படி, அறத்தின்படி செயற்படுகின்ற ஒருமதம். ஆனால் கடந்த காலங்களில் அவற்றிற்கு ஒவ்வாத செயற்பாடுகளில் பல எமது மண்ணில் நடந்துள்ளதாக நாம் கருதவேண்டியுள்ளது. அவ்வாறான ஒரு சூழ்நிலையில் நாம் வாழ்ந்த குற்றத்திற்காக இன்று நிலவும் கஷ்டங்களை நாமும் அனுபவிக்க வேண்டியுள்ளது போலிருக்கிறது எனவும் ஆசிரியர் குறிப்பிட்டார்கள்.

ஞானச்சுடர் நான்கு கட்ட வளர்ச்சியினை வெளிப்படுத்தி வெளிவருவதாக துரை கணேசமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள்.

1. 1998 - 1999 காலகட்டம்:- ஆரம்பகால வளர்ச்சிக்கட்டம்
2. 2000 - 2003 காலகட்டம்:-.அட்டைப்படத்தில் வர்ணமாற்றங்களுடன் ஏற்பட்ட வளர்ச்சிமாற்றம்
3. 2004 - 2005 காலகட்டம்:- பலவர்ணங்கள் புகுத்தப்பட்ட அட்டைப் படத்துடன் ஆக்கபூர்வமான வளர்ச்சிக் கட்டம்
4. 2006 காலகட்டம்:- பல்வேறு வர்ணங்கள் புதுமெருகுடன் புகுத்தப்பட்ட அட்டையும் உள்ளடக்கமும் சர்வதேச தரத்திற்கு ஈடுகொடுக்கும் வளர்ச்சி.

இவ்வாறு ஞானச்சுடரின் வளர்ச்சியை பொதுநோக்காக மதிப்பிட்டது மட்டுமன்றி புரட்டாதிமாத மலரின் கட்டுரைகளையும் மதிப்பீடு செய்தார்கள்.



உ

# சுடர் தரும் தகவல்

## ஜேர்மன் சுவாமிகள்

மேலைத்தேச நாடுகளில் இருந்து இந்தியா இலங்கை போன்ற கீழைத்தேச நாடுகளுக்கு தலயாத்திரைக்காகவும் அதேபோன்று ஆத்மீக ஆராய்ச்சி போன்றவற்றிற்காகவும் வருகைதந்த பல பெரியோர்கள் இந்நாடுகளில் பேணப்படுகின்ற ஆத்மீகத்தின் சிறப்புக்களையும் அவற்றின் மகத்துவத்தையும் உணர்ந்து கொண்டது மட்டுமன்றி இந்நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சமயத்துறவிகளின் தனித்துவத்தாலும் கவரப்பட்டு இறுதியில் தங்களையே இவற்றில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்கள். காலப்போக்கில் இவர்களே சிறந்த ஞானிகளாக மாறியுள்ள சம்பவங்களையும் பார்க்கின்றோம். இந்தவகையில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் துறவு வாழ்க்கையை மேற்கொண்ட ஜேர்மன் நாட்டைச்சேர்ந்த பீற்றர்யேச்சிம் ஸ்கொள்பெல்ட் என்பவரும் முக்கியமான ஒருவராவார். இவரைப் பொதுவாக ஜேர்மன் சுவாமிகள் என அழைப்பர். கௌரிபாலா சுவாமிகள் என்பதும் இவருடைய இன்னொரு பெயர் ஆகும்.

1907ஆம் ஆண்டு பிறந்த பீற்றர் யேச்சிம் ஸ்கொள்பெல்ட் ஜேர்மன் நாட்டிலிருந்து இந்தியா இலங்கை ஆகியநாடுகளில் உள்ள பல்வேறு இடங்களுக்கும் தலயாத்திரை மேற்கொண்டதுடன் பல துறவிகளையும் ஞானிகளையும் தரிசித்து அவர்களிடம் ஆசிர்வாதம் பெற்றுள்ளார்கள். இந்த துறவிகளின் வாழ்க்கைமுறையில் ஒன்றிப்போன இந்தப் பெரியார் அவர்களுடைய வாழ்க்கைமுறையைப் பின்பற்றி அவர்களுடன் தங்கியிருந்து வாழ்ந்துள்ளதையும் அறியமுடிகிறது. ரமண மகரிஷியிடம் சென்று அவரைத் தரிசித்து அவரிடம் ஆசிர்வாதம் பெற்றது போல ஆதிசங்கராச்சாரியிடம் சென்று அவரிடமும் ஆசிபெற்று அவருடன் தங்கியிருந்துள்ளார்கள். இக்காலத்தில் தான் இவருக்கு ஆதிசங்கராச்சாரியாரால் கௌரிபாலகிரி என்ற தீட்சாநாமம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஜேர்மன்சுவாமிகளை கௌரிபாலசுவாமிகள் என்றும் அழைப்பது வழக்கம்.

ஜேர்மன் நாட்டைச்சேர்ந்த பீற்றர் யேச்சிம் ஸ்கொள்பெல்ட் என்ற இந்த பெரியாரிடம் ஆத்மீகநாட்டம் இருப்பதை உணர்ந்துகொண்ட யோகர்சுவாமிகள் இவரை யாழ்ப்பாணத்தில் ஒரு பொது இடத்தில் தற்செயலாக சந்திப்பது போல சந்தித்து "சும்மா இரு" என்ற தத்துவத்தை இவருக்கு உபதேசித்து ஆசிர்வாதம் செய்துள்ளதையும் அறியமுடிகிறது.

இவ்வாறு பல இடங்களுக்கும் சென்று பலஞானிகளது தரிசனங்களையும் பெற்ற ஜேர்மன் நாட்டைச்சேர்ந்த பீற்றர் யேச்சிம் ஸ்கொள்பெல்ட் துறவு வாழ்க்கையை விரும்பி மேற்கொண்டு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச்சூழலில் மயில்வாகனம் சுவாமிகளுடன் ஆனந்தாச்சிரமத்தில் தங்கி தூய்மையான துறவு வாழ்க்கையை வாழ்ந்துள்ளார்கள். மயில்வாகனம் சுவாமிகளும் இவருடன் மிகவும் அன்னியோன்னியமாக பழகி இவருக்கு வேண்டிய எல்லாவசதிகளையும் செய்து கொடுத்துள்ளார்கள். இவரைப்போல மேலும் சில வெளிநாட்டுத் துறவிகளுடனும் உள்நாட்டுத் துறவிகளுடனும் இவர்

ஆனந்தாச்சிரமத்தில் தங்கியிருந்த காலத்தில் இவரை எல்லோரும் ஜேர்மன் சுவாமிகள் என அழைக்க ஆரம்பித்தனர். காலப்போக்கில் ஆனந்தாச்சிரமத்திற்கு அருகே ஜேர்மன் சுவாமிகள் தனக்கென ஓலைகளால் ஒரு அழகான கொட்டில் அமைத்து அக்காலத்து முனிவர்கள் போல அதனை பர்ன்னசாலையாகப் பயன்படுத்தியுள்ளார்கள். இவ்வாறு அவரிடம் வருகின்ற அடியார்களை ஆசிர்வதித்து நல் உபதேசமும் செய்ததை பசுமையான நினைவுகளாக இன்று பலரும் குறிப்பிடுகின்றனர். ஜேர்மன் நாட்டில் வசதியான குடும்பத்தில் பிறந்து மேலைத்தேச வாழ்க்கை முறையினையும் அந்த நாட்டின் மதக் கோட்பாடுகளையும் நன்கு தெரிந்து வைத்திருந்த ஸ்கொள்பெல்ட் அவர்கள் இங்கே எளிமையான இயற்கையோடு அமைந்த வாழ்க்கையை வாழ்ந்து எமது மதக்கோட்பாடுகளை உள்வாங்கி வாழ்ந்ததுமட்டுமன்றி தனது பரந்த அறிவினாலும் அனுபவத்தாலும் மற்றவர்களையும் வழிப்படுத்தியுள்ளார்கள்.

ஜேர்மன் சுவாமிகள் யோகர்சுவாமிகளைச் சந்தித்தபின் அவரை தனது குருவாகஏற்று "சும்மா இரு" என்ற அருள் வாசகத்தை தனது கைகளில் பச்சைகுத்தி அதனை ஒரு குறியீடாக மற்றவர்களுக்கு வெளிப்படுத்தி மற்றவர்களையும் வழிப்படுத்தி யுள்ளார்கள். இவர் ஏராளம் நூல்களை வாசித்து தன்னைப் பக்குவப்படுத்திய அதேநேரம் ஆங்கிலமொழியில் எமது மதம் தொடர்பான நூல்களையும் வெளியிட்டுள்ளதாக அறியமுடிகிறது. மேலும் நீயார் என்ற வினாவை ஒருவன் கேட்டு அதற்கு ஆழமான விடைகாண முற்படும்பொழுது அவன் தன்னைப்பற்றியும் சூழலைப்பற்றியும் முழுமையாக விளங்கிக்கொள்ளமுடியும் என்ற கொள்கையைப் பலருக்கும் பரப்பலானார்கள்.

ஜேர்மன் சுவாமிகள் சந்நிதியில் வாழ்ந்த காலத்தில் ஒவ்வொருவருடமும் கதிர்காமத்திற்கு தலயாத்திரையை தலைமைதாங்கி வழிப்படுத்திச்செல்வார்கள். அதில் வெளிநாட்டைச்சேர்ந்த பற்றிக்ஸ் சுவாமிகள் உட்பட ஏராளம் மக்கள் பங்குபற்றுவார்கள். கதிர்காமத்திற்கு மட்டுமன்றி பிரசித்திபெற்ற வேறு தலங்களுக்கும் இவர் அடிக்கடி தலயாத்திரை மேற்கொள்வார்கள். வெளிநாட்டின் பல பாகங்களிலிருந்தும் எமது நாட்டின்பல இடங்களிலிருந்தும் அதிகமான அடியார்கள் இவரிடம் வந்து ஆசிபெற்று செல்வது வழக்கம்.

தனது இறுதிக்காலம் நெருங்கிவிட்டதை உணர்ந்துகொண்ட ஜேர்மன் சுவாமிகள் தன்னை அடிக்கடிவந்து தரிசித்து செல்லும் வெளிநாட்டைச்சேர்ந்த றோஸ் என்ற பெண்மணி இவரை இறுதியாக சந்திக்கவந்தபொழுது தனது கண்களை மூடிவிட்டுச் செல்லுமாறு அவரைக் கேட்டுக்கொண்டார்கள். அதற்கிணங்க அந்த அம்மையாரும் இங்கே தங்கியிருந்தார்கள். 1983ஆம் ஆண்டு மே தினமான உலகதொழிலாளர் தினம் கொண்டாடப்படும் அதேநாள் ஜேர்மன் சுவாமிகள் இறைபதம் அடைந்தார்கள். தொண்டைமானாறு வெல்லங்கிராய் மயானத்தில் அவரது இறுதிக்கிரியைகள் இடம்பெற்றன. றோஸ் என்ற பெண்மணி அவரது இறுதிக்கிரியைகளை அவரது விருப்பப்படி நிறைவு செய்தார்கள். மேலும் இவருக்கு நெருக்கமான சில வெளிநாட்டு அன்பர்கள் இவரை மீண்டும் தமது நாட்டிற்கு திரும்பிவருமாறு அழைத்த பொழுதிலும் சந்நிதியானது அருட்கடாட்சத்திற்கு உட்பட்ட ஜேர்மன் சுவாமிகள் இறுதிவரை சந்நிதியிலேயே வாழ்ந்து அவனது திருவடிகளை அடைந்ததும் நாம் இங்கே குறிப்பிடவேண்டிய விடயமாகும்.

# அன்று முருகன் திருவாய்மலர்ந்தபடி இன்று அன்னப் பணிபுரியும் சந்நிதியான் ஆச்சிரமப் பேரவை

ஈசனார் தந்த பொருளிலக் கணத்துக்
கேற்றதாய் வந்தபல் லுரையில்
பேசுநக் கீரராருரைதனை அதுவே
பேருரை யி∴தெனக் குறித்த
ஆசிலா மூங்கை ஐயாட்டைப் பராயத்
தாகிய உருத்திர சன்மனாம்
மாசிலா மணியே குமரனே நீயே
வந்தனை செல்வச்சந் நிதியே.

எட்டெனுந் தொகையி லொன்றாய்
இருஞ்சங்க காலத் தின்முன
மட்டில்பல் புலவர் பாடி
வைத்தநற் பரிபா டலில்
கட்டழ குடைய யுந்தன்
பாடலும் பாடி வந்தாய்
மட்டவிழ் கடம்பா பலரின்று
பாடக் கேள் சந்நிதியே.

அந்தணப் பெரிய ரான
அருள்மிகு கச்சி யப்பர்
சிந்தையே கோயி லாக்கி
தீட்டிய கவிதைச் சொத்தாம்
வந்தனைக் குரிய தான
வளமுடைத் தமிழி லான
கந்தபு ராணங் கண்டேன்
கந்தா சந்நிதியுங் கண்டேன்.

கணமொன்று பசியைத் தீர்க்கக்
கடுந்தவம் பிழைத்தோ ராகக்
குணமிலா யிரம்போர்க் கொருவர்
குறைதீர்க்க அந்நிலையி லான
இணையில்கீ ரரை யடைக்க

ஏங்கிஆற் றுப்படையைப் பாடக்
கணை யினால் பூதம் கொன்ற
கந்தன் வாழ் சந்நிதி யிதுவே

வருந்திய வாழ்வி னாலே
வையக மிகழ நொந்து
திருந்திய அருண கிரி
தேம்பியண் ணாம லையில்
இருந்துகீழ் விழத் தாங்கி
இனியதாம் முத்தென் றதனால்
அரும்புகழ் பாட வைத்த
அப்பனும்சந் நிதியினானே.

தொண்டைமா னாற்றில் வைகும்
சுடரிலை நெடுவே லையன்
லண்டனில் கனடா தன்னில்
ஜேர்மனி பிரான்ஸ் செ[illegible]தியில்
தண்டமிழ் நாடவுஸ் தி
ரேலியா நியூசி லாந்தில்
எண்டிசைச் தொண்ட ரேத்த
எங்குமாய் நிற்பன் தானே.

தேவிதன் வார்த்தை தன்னைச்
சிரத்தினா லேற்று நாளும்
ஆவிபோல் மரபி லுள்ள
அனைத் தையும் பாடுகின்றேன்
மேவித்தொண் ணூற்று மூன்றும்
மெல்லென மேலும் வாழ
ஆவலாய்ச் சோமாஸ் கந்தன்
அடியினை யேத்து வேனே.

*முதுபெரும்புலவர்*
*கலாபூஷணம், ஆசிரியர்,*
*வை.க. சிற்றம்பலவனார்.*

உ

# இறை வழிபாட்டில் கேடுவிளைவிக்கும் பூஜைத்திரவியங்களைத் தவிர்ப்போமாக

திரு நீர்வைமணி அவர்கள்

சைவசமயிகள் சிவசின்னங்களாக விபூதி, உருத்திராக்கம் என்பவற்றைப் பெருமையுடன் அணிந்து இறைவழிபாடு செய்வது எமது தனித்துவமான கலாச்சாரப் பண்பாடாகும். விபூதி, உருத்திராக்கம் என்பவற்றைச் சிவசின்னங்களாக கொள்வதுபோல சந்தணம், குங்குமம், சாம்பிராணி, ஊதுபத்தி, பன்னீர், அத்தர், எண்ணெய், நெய், சங்கு போன்ற பல்வேறு பொருட்களையும் இறைவழிபாட்டிற்காகப் பயன்படுத்திவருகின்றனர்.

ஆனால் நம்முன்னோர் நம்பிக்கையுடனும், தூய்மை, பயபக்தியுடனும் சிவசின்னங்களையும், பூசைக்குரிய பொருட்களையும், இறைவனிடமும், வழிபடுவோரிடமும் கொடுத்துத் தெய்வப் பணிகளைச் செய்துவந்தனராயினும், இன்று இவையாவும் மிகமிக மோசமான சந்தைப் பொருட்களாகவும், கலப்படப் பொருட்களாகவும் மாறியிருப்பதைக் காணும்போது வேதனைப்படவேண்டியுள்ளது.

புனிதமானமுறையில் இறைவழிபாட்டிற்காகத் தயாரிக்கப்படவேண்டிய திரவியங்கள் பலவும் இன்று தவறான முறையில் தவறாகவும் வியாபாரத்திற்காகவும் தயாரிக்கப்படுகின்றன. மேலும் இவற்றைவாங்கிப் பாவிப்பவர்களும் நோய்நொடிகளுக்கும் பக்திசிரத்தையில்லாத நிலைகட்கும் ஆளாகின்றனர்.

இறைவழிபாட்டிற்குரிய கர்ப்பூரமானது எரிந்து ஒன்றுமில்லாதுபோவது இந்த உலகமாயையை நீக்கி மக்கள் நற்கதியடையவேண்டுமெனும் சிறந்த தத்துவத்தை உணர்த்துவதாகச் சமயச் சான்றோர் கூறுவார்கள்.

ஆனால் இன்றைய வழிபாட்டிற்குக் கர்ப்பூரத்தை வாங்கிக்கொளுத்தினால் அவ்விடம் ஒரே கரும்புகையாகவும், சுவாசிப்பதற்கு ஒவ்வாததாகவும், எரியுமிடத்தில் மெழுகு உருகி ஓடுவதாகவும் அதற்கு அண்மையில் நிற்பதே பயமாகவும் காணப்படுகின்றது.

தெரிந்தும், தெரியாமலும் எல்லோரும் இந்த மெழுகு சூடத்தை வாங்கிக் கொளுத்துவதனால் பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றன.

இதேபோன்று பசுவின் சாணத்திலிருந்து பக்குவமாகத் தயாரிக்கப்படவேண்டிய விபூதி (திருநீறு) சுண்ணாம்பு, கற்றூள், எரிந்தமரச்சாம்பல் போன்ற பலவற்றுடன் வாசனையூட்டப்பட்டுச் சந்தைப் பொருளாக விற்கப்படுகின்றது. இவற்றை வாங்கித் திருநீறு என அணியும்போது நோய்களைத் தீர்க்கும் திருநீறு என்பது மாறிப் புதுப்புது நோய்களையும், சருமவியாதிகளையுமே ஏற்படுத்திவிடுகின்றது.

இவ்விதமாகவே சைவசமயிகளின் வழிபாட்டிற்கும், சமயத்தேவைகட்கும் அன்றாடம் தேவைப்படும் சந்தணம், குங்குமம், சாம்பிராணி, அபிசேகஹோம திரவியங்கள் பலவும் கலப்படங்களாகவும், அவற்றைப் பாவிப்பதனால் ஏற்படக்கூடிய நன்மை

கட்குப் பதிலாகப்பெரும் தீங்குகளையும், துன்பங்கள் வியாதிகளைத் தருவனவாகவும் காணப்படுகின்றன.

சில விபூதி, சந்தண, குங்குமப் பாவனையால் நெற்றியிலும், பூசுமிடங்களிலும் சொறியும், எரிவும் ஏற்படுகின்றன.

மேலும் நம்முன்னோர் காந்தசக்தியுள்ள தெய்வீகசக்தியை ஈர்க்கக்கூடிய கருங்கல், செப்புலோகம், பஞ்சலோகக் கலவைகள், போன்றனவற்றை விக்கிரக அமைப்புக்களுக்கும் தேவைகளுக்கும் பயன்படுத்தி நற்பயன்பெற்றனர்.

ஆனால் இன்றோ பிளாஸ்டிக், பளிங்குக்கல், மாபிழ்கள், சில்வர்த்தகடுகள், கலவைப்பொருட்கள் என்பவற்றைக் கொண்டே தெய்வச்சிலைகளையும், வழிபாட்டிற்குரிய பொருட்களையும் ஆக்குவதனால் மனத்தூய்மையான இறைவழிபாடு குன்றி வழிபாடுகளும் வர்த்தகப் பாங்குடையனவாக மாறுகின்றதைக் காணலாம்.

இலட்சத்திற்கு ஒரு சங்கு வலம்புரியாம். வலம்புரிச்சங்கு வழிபாட்டிற்குரியதாகவும், இலட்சுமீகரமுடையதாகவும் போற்றுவார்கள். அப்படியான வலம்புரிச் சங்கையே அதுமாதிரிப் பிளாஸ்ரிக்கில் உருவாக்கிச் சந்தைப்பொருளாக விற்பனை செய்கின்றார்கள்.

இவ்விதமாக உருத்திராக்க மணி மாலைகள்கூட பிளாஸ்ரிக் பளிங்குக்கல், மற்றும் போலிவிதைகளால் ஆக்கப்பட்டுக் கடைகளில் விற்பனையாவதைக் காணலாம். இவ்விதமான, தவறான செயற்பாடுகளிலிருந்து சைவசமயத்தை நம்பிக்கையுடனும், எமது சமயத் தத்துவங்களை நன்குணர்ந்தும் அதற்கேற்ப நம்முன்னோர், ஆன்றோர் வகுத்த நன்னெறி வழிகளிற் சிவசின்னங்களையும், சிவத்திரவியங்களையும் பேணியும், பாதுகாத்தும் இறைவழிபாடுகளை உள்ளன்புடன் செய்து வருவோமாயின் எல்லோரும் நல்வாழ்வு வாழமுடியுமன்றோ!

வாழ்க்கையிற் பழையன கழிதலும் புதியன புகுதலும் வேண்டியதே ஆயினும், எமது சமய நன்னெறிகளால் ஏற்படக்கூடிய நலங்களையும், அதன் தனித்துவத்தையும், சிறப்பினையும் தேவையையும் மனத்திற்கொண்டு சைவத்தின் பழைமையையும், தேவையையும் என்றும் பாதுகாத்து வாழ்க்கை நடைமுறையிற் கைக்கொண்டு தெய்வீக நன்னெறி வாழ்வு வாழ முயல்வோமாக.

ஆன்மீக ஈடேற்றத்திற்காகச் செய்யப்படும் ஆலயவழிபாடுகளும், வழிபாட்டிற்காக இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படும், ஆலயத்திற்குரிய பல்வேறு பூசைத்திரவியங்களும், சிவசின்னங்களாகக் கருதப்படும் விபூதி, உருத்திராக்கம் போன்றனவும் இன்று சந்தைப்பொருட்களாகவும் எமது சமய ஆசாரங்கட்கு ஒவ்வாதனவாகவும் காணப்படுவதும், இதனாற் பல்வேறு கேடுகளும், துன்பங்களும் ஏற்படுவதும், இதனை மக்கள் அறிந்தும், தெரிந்தும் எதுவும் செய்யமுடியாது நடந்துகொள்வதனையும் கருத்திற்கொண்டு இதற்கு மாற்றுவழிகண்டு எமது சமயப்பண்பாடு கலாச்சாரங்களை இயன்றளவு கவனத்திற்கொள்ளவேண்டும் எனும் சிந்தனைக்காக இக்கட்டுரையை எழுதியுள்ளோம்.

**மிகப்பலமுள்ள மனிதன் பொறுமைசாலி.**

உ

# அன்பரும் அன்பனும்

**திரு க. சிவசங்கரநாதன் J.P அவர்கள்**

பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார். என்பது வள்ளுவனார் கண்டவாய்மையாகும். புண்ணிய பாவங்களைக் கடந்தவரே இறைவனடி சேரத்தகுந்தவராவர். புண்ணியமாவது பிறருக்குத் தொண்டு முதலியன செய்தலாம். செய்யுந்தொழிலுக்கேற்ப ஊதியத்தை இறைவன் அளித்து உதவுவானே அன்றித் தன்னுடன் ஏற்றுக்கொள்ளான் என ஆன்றோர் மொழிகின்றனர் பாபமாவது பிறர்க்குத் தீங்கிழைக்கும் செயலைத்தவிர வேறல்லதாகையால் குற்றத்திற்கேற்பத் தண்டனையை இறைவன் வழங்குகின்றான். ஆகவே புண்ணிய பாவங்கள் இரண்டாலும் இறைவனை எவரும் அணுகமுடியாது அப்படியாயின் இறைவனடியைச் சேரும் வழிதான் என்ன?

உலகத்து உயிர்களிடம் அன்பு செலுத்துதலும் இறைவனின் வடிவத்தைச் சகல இடங்களிலும் அகக்கண்ணாற் கண்டு கொள்ளுதலும் இன்பதுன்பங்களில் இச்சையைச் செலுத்தாது பரந்த நோக்கில் நிற்றலுமே இறைவனடி சேரவழி கோலும். பிறவிப்பெருங்கடல் நீந்த உதவும் படகாகுமென்பது ஆத்மஞானியரது கருத்து இது உண்மையே. எப்படி எனில் உள்ளத்தில் தூய்மை கொண்டவர்கள் மேற்கூறிய விஷயங்களைக் கையாண்டு நித்தியசுகமான இறைவனடி சேருதலை எய்தியுள்ளனர்.

இறைவனின் தோற்றத்தை எவற்றினும் கண்டு களித்த சாதுக்கள் முத்தி எனும் சாம்ராஜ்யத்தை அடைந்துள்ளனர். அகிலத்துயிர்களிடம் பேரன்புபூண்டு ஆற்றல் புரிந்த தியாகதிலகர்கள் ஆண்டவனுடன் ஐக்கியமாகியுள்ளனர். இன்பதுன்பங்களிற் பற்றில்லாத பெரியோர்கள் என்றும் அழியாத இன்பநிலையைப் பெற்றுள்ளனர். இறைவன் எங்கும் உளனாய் எல்லாப் பொருளாகவும் விளங்குகின்றான் என்பதும் எல்லாவற்றையும் இயக்குகின்றான். என்பதும் மெய்ஞ்ஞானியர் கண்ட உண்மை. கல்லினுள் தேரைக்கும் கருப்பை உயிருக்கும் உணவளிக்கின்றவன் இறைவன்.

இறைவன் எண்குணங்களை உடையவனாய் இருப்பினும் பேருருடைமை ஆகிய அலுப்தசக்தியின் வடிவமாகவே உளன். அறக்கடலாக விளங்கும் ஆண்டவன் அனைத்தையும் படைத்துக் காக்கின்றான். இவ்வுண்மையை உணரும் ஞானியர்கட்கு மிக எளியனாக விளங்குகின்றான் அவனை அன்பர்கள் அச்சுதன் என அழைப்பர். அன்பே உருவானவன் அச்சுதன் அவனே அயன் மால் உருத்திரன் என அழைக்கப் படுகின்றான். சுதன் என்ற வார்த்தைக்கு மகன், பிறந்தவன், சிறியவன் என்பது பொருள் அச்சுதன் என்றால் அவன் யாருக்கும் மகனல்லன் பிறவியற்றவன் பெரியோனென்றும் சிறியோனென்றும் வரையறுக்கப்படாதவன் என்றென்றும்

அழிவற்றவன் என்பதாம் அகண்ட பரம் பொருளாகிய இறைவன் தன்னை அணுகுவோர் எவராயினும் ஆதரித்தருள் புரியும் தன்மையுடையவன்.

ஆலயங்களைச் சுற்றிவந்தும் ஆடம்பரமான பூஜைகள் செய்தும் ஆண்டவனை வழிபடுவோர்க்குள்ள தூரத்தைக் காட்டிலும் தம்மிடமே இறைவனைக் காணும் பண்புபடைத்தோருக்கு மிகமிக அருகில் இறைவன் வதிகின்றான் அவர்களின் துன்பங்களை நீக்குகின்றான் இறைவன் எங்கும் உளன் என்று உபதேசித்த மைந்தன் பிரகலாதனின் உரைகளை மதியாமல் அஞ்ஞானத்தில் மூழ்கிய அரக்கன் இரண்யகசிபு அகந்தையால் அச்சுதனை இகழ்ந்து பேசி அழிக்கப்பட்டான் தன்னிடமே இறைவனைக் கண்டஞானியாகிய பிரகலாதன் காப்பாற்றப்பட்டான். அநாதையாக, அபலையாக விடப்பட்ட திரௌபதி இறைவனை நினைந்து ஓலமிட்டாள். வைகுந்தவாசா துவாரகைவா சாகண்ணா பரமபதநாதா என அலறியும் பராமுகமாக இருந்த விஷ்ணுமூர்த்தி இருதய கமல வாசா எனத் திரௌபதி கூக்குரலிட்டவுடனே கருணை கூர்ந்தான் உடைகள் பெருகின மானம் நிலைத்தது. பாண்டவரில் இளையவனும் பரமஞானியுமாகிய சகாதேவனை இறைவன் சோதிக்கப் பல்லாயிரம் தோற்றங்களாய் நின்றபோது அவன் தன்னிடமும் இறைவன் உளனென்றறிந்து தன் மூச்சை அடக்கினான். கிருஷ்ணர் தன்னைச் சகாதேவன் வெல்ல இயலுமென நம்பிக்கொண்டார். பூவுலக மாயையிற் சிக்கி உழலத்தலைப்பட்ட சுந்தரரை ஆட்கொண்டான் இறைவன் அப்போது சுந்தரர் அவனது அருளை வியந்து பின்வருமாறு போற்றுகிறார்.

ஊனானாய் உயிர் ஆனாய் உடல்ஆனாய் உலகானாய்
வானானாய் நிலன் ஆனாய் கடல்ஆனாய் மலைஆனாய்

கற்பாறையில் பிணைக்கப்பட்டு கடலில் தள்ளப்பட்ட திருநாவுக்கரசர் எங்கும் நிறைந்த இறைவன் காப்பானென உறுதிகொண்டார் அவ்வாறே இறைவன் அவரைக்காப்பாற்றிக் கரையேற்றினான். அவர் நின்ற திருத்தாண்டகத்தில் இறைவனைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

தீயாகி நீராகித் திண்மை ஆகித்
திசை ஆகி அத்திசைக்கோர் தெய்வம்ஆகி
தாயாகித் தந்தையாய்ச்சார்பும் ஆகித்
தாரகையும் ஞாயிறும் தண்மதியும் ஆகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தில் நின்ற
இரசங்கள் நுகர்வானும் தானேஆகி
நீயாகி நானாகி நேர்மைஆகி
நெடுஞ் சுடராய் நிமிர்ந்தடிகள் நின்றவாறே

பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையில் வைகைநதி பெருக்கெடுத்துப் பிரவாகித்தது ஏனெனில் மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியனால் தண்டிக்கப் படுபவராய்ச் சுடு மணலில் நிறுத்தப் பட்டபோது அவர் கொடுந்துன்பத்திற்கு

**பிழை செய்தல் மனித இயல்பு.**

வருந்தாமல் அத் துன்பம் ஆண்டவனைச் சார்ந்தது எனக் கருதினார் அன்பர்களை ஆதரிக்கும் அருளாளனான இறைவன் சகியாமல் மாணிக்கவாசகரின் துன்பத்தைத் தவிர்க்கவும் பாண்டியனுக்குப் புத்திபுகட்டவும் வைகை நதியைப்பெருகிவரச் செய்தனன்.

பிட்டுவிற்றுச் **சீவனம்** செய்யும் வந்தி என்னும் கிழவி அவ்வெள்ளத்திற்கு அணையிடத் தனக்கு யாரும் இல்லாததால் எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் தன்னிடம் உள்ளான் என்ற உணர்ச்சியில் அவனே தனக்கு ஆதரவளிக்க வேண்டுமெனக் கோரினாள். உடனேயே இறைவன் கூலியாளாக தோன்றினார். அரிமர்த்தன பாண்டியன் அவனை அடித்த அடி அகில சராசரங்களிலும் தன் மீதும் பட்டபின்தான் வந்தவன் இறைவனெனவும் அவனது அன்பரான மாணிக்கவாசகர் பொருட்டு லீலை புரிந்தானென்றும் உணர்ந்தனன். மாணிக்கவாசகர் இறைவனைப் பின்வருமாறு புகழ்கின்றார்.

போற்றி இப்புவனம் நீர்தீக் காலொடுவானமானாய்
போற்றி எவ்வுயிர்க்கும் தோற்றமாகிநீ தோற்றமில்லாய்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாய் ஈறின்மையானாய்
போற்றி ஐம்புலன்கள் நின்னைப் புணர்க்கிலாப் புணர்க்கையானே.

வேதங்களின் நாயகமணியாகவும் ஞானசமுத்திரமாகவும் அன்பரின் குறைகளைப் போக்கும் குணக்குன்றாகவும் உயர்வாகிய மோனநிலையின் சிறந்த இளமைத் தோற்றமாகவும் பரிசுத்தமாகிய இன்பப் பிழம்பாகவும் திரிமூர்த்திகளாகவும் அவர்களுக்கும் உயர்வானவனாகவும் இந்த ஸ்வரூபங்களேயற்ற தோற்றமாகவும் இறைவனை வடலூர் வள்ளல் காண்கிறார்

மறை முடிக்கும் பொருத்தமுறும் மணியேஞான
வாரிதியே அன்பர்கள்தம் மனத்தேநின்ற
குறைமுடிக்கும் குணக்குன்றே குன்றாமோனக்
கோமளமே தூயசிவக்கொழுந்தே! வெள்ளைப்
பிறைமுடிக்கும் பெருமானே துளவமாலைப்
பெம்மானே! செங்கமலப்பிரானே இந்த
இறைமுடிக்கும் மூவர்கட்கும் மேலாய்நின்ற
இறையே இவ்வுருவும் இன்றி இருந்ததேவே.

- மகாதேவமாலை அருட்பா-

காலஇடசமய சந்தர்ப்ப ஜீவஸ்தம்பனட் பொருள்களாக விளங்கும் உன்னை
அருளாகி நின்றவர்கள் அறிவதல்லால் ஒருவர்
அறிவதற் கெளிதாகுமோ

அண்டபகிரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி
ஆனந்தமான பரமே

என மெய்ஞ்ஞானியாகிய தாயுமானார் இறைவனைப் போற்றுகின்றார். இறைவனின் பெருமை அளப்பரியது அவனது அன்பர்கள் அதனை அளந்து அறிந்து அதனைக்கடந்தும் விடுகின்றனர். ஏன்? இறைவன் அவர்கள் பால் அன்பைப் பொழிகின்றார். உலகம் அறியுமாறு அவர்களது ஆற்றலை அதிகப்படுத்துகின்றனன். அவனது அன்பர்கள் அன்பனாகிய அவனது சோதனைக்குத் தளருவதில்லை அதற்குப்பதிலாக அதிக கீர்த்திபெறுகின்றனர். அவர்கள் உலக உயிர்களைப் பாரபட்சமின்றி நோக்குபவர்கள் கருணையுடன் அவற்றில் இறைவன் வதிவதை அறிந்து ஆனந்தமெய்துபவர்கள் அன்பினால் அகிலம் தழைத்திடுக.

## சிந்தனைக்கு.....

பகலும் இரவும் சேர்ந்துதான் ஒருநாள். நமக்குப் பகலும் வேண்டும், இரவும் வேண்டும். பகலிலே நமக்கு வேண்டிய உணவுக்காகவும், உடைக்காகவும் வேலை செய்கிறோம். பாடுபடுகிறோம். சம்பாதிக்கிறோம். கடைசியிலே களைத்துப்போய் சோர்ந்து விடுகிறோம். இரவிலே களைப்பு, சோர்வு எல்லாம் போக்குவதற்காகப் படுத்து உறங்கி விடுகிறோம். எழுந்திருக்கும்போது தெம்போடு எழும்புகிறோம். அதனால் நமக்குப் பகலும் வேண்டும், இரவும் வேண்டும். இதிலிருந்து என்ன தெரிகிறது? வெளிச்சம் தோன்றியபோதே இருட்டும் தோன்றிவிட்டது. இரண்டும் நமக்கு வேண்டும். இருட்டில் பயமாக இருக்கிறதே என்றால் அதற்காக இருட்டே வேண்டாம் என்று சொல்ல முடியுமா? வெளிச்சமிருந்தால் தூக்கமே வராது. அதனால் தூக்கம் வேண்டும். இரவும் வேண்டும்.

நிழலில் இருக்கும் ஒருவனுக்கு நிழலின் அருமை தெரியுமா? வெயிலில் போய்விட்டு வந்தவனுக்குத்தான் நிழலின் அருமை தெரியும். அதுபோலத்தான் வாழ்க்கையும். வாழ்க்கையில் சுகத்தின் அருமை தெரிவதற்காக நடுநடுவே சற்றே துக்கத்தையும் கொடுக்கிறார் இறைவன். துக்கம் வரும்போதுதான் நமக்கு உண்மை விளங்குகிறது. கஷ்டத்தைக் கொடுத்து இறைவன் நம்மைச் சோதனை செய்கின்றார். சோதனை வரும்போது நாம் கலங்கக்கூடாது. எல்லாம் இறைவன் செயல் என்று அவன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு நாம் நம் கடமையைச் சரியாகச் செய்தால் வரும் சோதனைகளெல்லாம் சாதனைகளாகிவிடும்.

## வெப்பமும், குளிர்ச்சியும்

திருமாலுக்கு உகந்தது துளசி, சிவனுக்கு உகந்தது வில்வம், சிவம்- சூடு. விஷ்ணு குளிர்ச்சி சிவம் - அனல், விஷ்ணு - நீர், இதனால் சிவன் கோவிலில் வெந்த நீரும், திருமால் கோவிலில் குளிர்ந்த நீரும் தருவார்கள். சூட்டைத் தணிப்பது வில்வம். குளிர்ச்சியைத் தணிப்பது துளசி. இதனால் சிவன் கோவிலில் வில்வ அர்ச்சனையும், திருமால் கோவிலில் துளசி அர்ச்சனையும் நடைபெறுகின்றது.

உ

# சிவனருள் ஆட்சியில் அறுபத்துமூன்று நாயன்மார் பூசைப்பாமலர்களும் வரலாற்றுச்சுருக்கமும்

சிவகவிமாமணி கவிஞர் ஆ. கதிர்காமத்தம்பி அவர்கள்

### காப்பு

பெறும்பயனை நோக்காது பேரன்பு பூண்டுவாழ்ந்த
அறுபத்து மூவர்க்கும் அருள்செய்த ஆட்சிதன்னை
சிறுவாழ்வுஞ் சிற்றறிவும் உடையேன்யான் இயம்புதற்கு
உறுதுணையாய் ஊக்குவிக்க ஐங்கரனை வேண்டுவனே

### அம்மை அப்பர் துதி

தில்லைமன்றில் ஆடல்புரியுஞ் சிவகாமி மகிழும்பிரானே!
வெள்ளிமன்றில் ஆடல் புரியும் மீனாட்சி யுவக்கும் பிரானே!
வல்வைநகர் வாலாம் பிகையும் மகிழ்தரநின் றாடும் பிரானே
தொல்லைவினை தீர்த்த ருள்செய் நும்பாதம் போற்றி போற்றி

தில்லைமன்றில் ஒளிரும் விளக்காம் சிவகாம சுந்த ரியாகி
நல்மதுரை வீற்றிருக்கும் நற்கருணை மீனாட் சியாகி
வல்வைநகர் போற்றி நிற்கும் வாலாம்பிகையே! எங்கள்
தொல்லைவினை தீர்த்த ருள்செய் நும்பாதம் போற்றி போற்றி

## அறிமுகம்

அன்பர்களே! நாம் பிறந்ததன் நோக்கம் - அநாதி மல முத்தராய் எங்கும் நிறைந்தவராய் என்றும் உள்ளவராய் எல்லாம் அறிபவராய் எல்லாம் வல்லவராய் அணுவில் அணுவாகியும் அண்டத்தில் அண்டமாகியும் அண்டசராசரங்களிலெல்லாம் கலந்து நின்றும் அவற்றின் வேறாகி நின்றும் விளங்குகின்ற சச்சிதானந்த சொரூபியாகிய சிவபெருமான், எங்களுக்கு இச்சரீரத்தையும் இச்சரீரத்தோடு இசைவாக மனம் புத்தி சித்தி அகங்காரம் சொத்து போகம் முதலியவற்றைத் தந்து எங்களைப் படைத்ததன் நோக்கம் - பிறவித் துன்பங்களில் நின்றும் நீங்கிப் பேரின்பப் பெருவாழ்வு பெறவேண்டும் என்பதேயாம்.

பேரின்பப் பெருவாழ்வையடைய - இறைவனையடைய - சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்கள் உளவாகக் கூறப்படுகின்றன. இவை ஒன்றன் மேல் ஒன்றாக முன்னேறிச் செல்லும் படிகளாகும். படிமுறைப்படி பின்பற்றிச் செல்லும்போது பேரின்பப் பேற்றை அடைய - இறைவனையடைய நீண்ட காலப் பாதையாக அமையலாம்.

ஆயின் அன்பர்கள் அடியார்கள்

அனுபவத்தில் கண்ட இலகுவான மார்க்கம் பக்தி மார்க்கமாகும். ***எம்பெருமான் பக்திவயப்படுவான் காண்*** என்பர் பெரியோர் பெரியபுராணச் சரிதைகள் யாவும் பக்தி மார்க்கத்தின் சிறப்பை விளக்குவனவாம். வேடுவனான திண்ணன், சிவாக முறையேதும் அறியாதவன். அன்பே உருவாய பக்திமார்க்கத்தினாலே ஆறே நாளில் முத்தியடைந்தான். திண்ணன் பூசித்த பெருமானை ஆகமவிதிப்படி பூசித்த சிவகோசரியார், ஆறுவருடங்களின் பின்பே முத்தியடைந்ததாகக் கூறப்படுகிறது. இது பக்தி மார்க்கத்தின் சிறப்பை விளக்கும் சிறந்த ஓர் உதாரணமாகும்.

எனவே இறைவனை அடையும் இலகுவானவழி பக்திமார்க்கமே என்பது தெளிவாகும். இவ்வுலகிலே எம்மைப் பெற்று வளர்த்த பிதாமாதாவை, நாம் எவ்விதம் பேணிப்பாராட்டுகிறோமோ அதனிலும் பன்மடங்கு மேலாக எவ்வித எதிர்பார்ப்புமின்றி, இந்த உடலையும் இதற்கிசைவாக இப்பூமியில் வாழ்வதற்கு ஏற்றதாக ஏனைய கரண புவன போகங்களையும் தந்து, பேரின்பப் பெருவாழ்வை நோக்கி நம்மை நகரவைக்கின்ற சிவபெருமானை போற்றிப் பேணவேண்டியது நம் ஒவ்வொருவருடைய பெருங்கடனாகும்.

எனவே, தொழில் செய்யும் வேளைகளிலும் நேரங்கிடைக்கும் வேளைகளிலெல்லாம் தூய அன்போடு எம்பெருமானை நினைத்துப் பிரார்த்தனை செய்துவரத், தானாகவே பக்திமார்க்கம் கைவரத் தொடங்கும். கிரமமான வழிபாடு தொடரும் பக்தி மேலிட்டு வரவர இறைவனின் கிருபா நோக்கம் செறியும். தலைபோகிறமாதிரி வருகிற துன்பங்கள் சிறிதாகித் தலைப்பாகையோடு போகிறமாதிரி ஆறுதல் கிடைக்கும்

எம்பெருமான் அடியார்களுக்கு அடியவராவர். அடியார்களுக் கடியார்களைக் கண்டு களிப்பவராவர்.

ஒளிர்பவனே வைத்தியனாய் நினதன்பர் பிணிதீர்த்தே
ஒளிப்பவனே ஓராதார் உள்ளத்து எந்நாளும்
அளிப்பவனே ஆராத அன்பூரும் அகத்தினார்க்குக்
களிப்பவனே அடியார்கட் கடியாரைக் காண்டலுமே

(வல்வை வைத்தீசர் அந்தாதி)

என்பது அதனைத் தெளிவாக்குகிறது. பெரியபுராணத்தில் வரும் 63 நாயன்மார்களும் சிவனடியாரையும் சிவபெருமானையும் தத்தம் இயல்புகளுக்கேற்றவாறு பூசித்து, எம்பெருமானின் அருளைப் பெற்றவராவர். எம்மில் பலருக்கு 63 நாயன்மார் எனத் தொகையளவில் தெரியுமேயன்றித் தனித்தனி முழு நாயன்மார்களின் பெயர்களோ அவர்கள் ஒவ்வொருவரும் செய்துவந்த தொண்டுகளின் விபரங்களோ அவர்கள் ஒவ்வொருவரும் எம்பெருமானால் ஆளப்பட்ட வரலாறுகளோ அறிவதற்கு வாய்ப்புகள் கிட்டாமையால் அறியாதவர்களாய் உள்ளோம். இறைவனிடம் அன்பு கூர்வதற்கு இவற்றை எல்லாம் அறிதல் பயனுடைத்தாகும்.

அவ்வகையில் ***சிவனருள் ஆட்சியில் 63 நாயன்மார் பூசைப் பாமலர்களும் வரலாற்றுச் சுருக்கமும்*** என்னும் நூல் பக்திமார்க்கத்தில் ஈடுபடும் அன்பர்களுக்கு

**அன்பு நிறைந்த இன்சொல் இரும்புக்கதவைக்கூடத் திறக்கும்.**

உதவும் என்பதை உணர்ந்து திருவருள் பாலிக்க, எம்பெருமான் அடியார்களுக்கு அருள்பாலிக்கச் செய்த அருளாடல்கள் ஒவ்வொன்றையுஞ் சுருக்கி ஒவ்வோர் பூசை மலராகவும், அன்புமீநாறிப் பக்திப் பரவசம் மேலிட, மேலும் ஓதிப் பயன் பெறும் வகையில் அருளாடல்களைப் பாமாலைகளாகவும் அமைத்து சிவனருள் ஆட்சியில் அறுபத்து மூன்றுநாயன்மார் பூசைப் பாமலர்களும் வரலாற்றுச் சுருக்கமும் என்னும் தொடரில் ஞானச்சுடர் சஞ்சிகையின் வாயிலாகத் தொடர்ச்சியாக வெளியிடத் திருவருள் பாலித்துளது. படிப்போரின் பொருள் விளக்கங்கருதி ஒவ்வோர்பாவின் கீழும் அப்பாமாலையின் பொழிப்பும் அதனை அடுத்து ஒவ்வோர் நாயன்மாரின் சரிதைச் சுருக்கத்தை அதனோடு தொடர்புடைய வகையில் இணைத்தும் தரப்பட்டுள்ளன.

தற்போதய காலநேரங்கருதிப் பெரியபுராணத்தைப் படித்துப் பயன்பெற முடியாதவர்கள் இதனை ஓதிப் பயன்பெற வழிகாட்டலாக அமையும் என்பது அடியேனின் சிந்தனையாகும்.

அடியார்கள் அன்பர்கள் பூசை நேரத்திலோ காலையிலோ மாலையிலோ புனிதமான இடத்திலிருந்து ஓதல் பயனுடையதாகும்.

(தொடரும்....

## தேநீக்கள்போல...

தேநீக்கள் மலர்களில் உள்ள தேனை உற்சாகத்துடனும் சுறுசுறுப்புடனும் சேகரிக்கின்றன. இவ்வாறு தேநீக்கள் மரத்துக்குமரம் தாவி எல்லா மரங்களிலுள்ள பூக்களிலிருந்தும் தேனைச் சேகரிப்பதனூடாக மகரந்தசேர்க்கை ஏற்படுவதால் மரங்களுக்கு நன்மை ஏற்படுகின்றன. அதேநேரம் தேநீக்கள் சேகரித்த தேனை மனிதன் மருத்துவத் தேவைகளுக்கு பயன்படுத்தி நன்மை அடைகின்றான். மொத்தத்தில் மரங்களும் மனிதர்களும் தேநீக்களால் நன்மை அடைகின்றனர்.

ஈக்கள் எல்லா இடங்களிலும் பறப்பதன்மூலம் அசுத்தத்தை எல்லா இடங்களிலும் பரப்புகின்றன. இதனால் மனிதனுக்கு பலவகையான தீமைகள் ஏற்படுகின்றன. முக்கியமாக நோய்க்காவிகளாக இந்த ஈக்கள் காணப்படுகின்றன. ஆகவே மற்றவர்களுக்கு பயன்படும் தேநீக்கள்போல மனிதர்களாகிய நாம் வாழவேண்டும். இவ்வாறு மற்றவர்களுக்கு பயன்படவேண்டுமென்று ஒவ்வொருவரும் சிந்திப்பதால் சமுதாயத்தில் பல பிரச்சினைகள் தாமாகவே மறைந்துவிடும். அதேநேரம் அனைவருக்கும் நன்மைகள் நாடிவரும்.

*புரட்டாதிமாத ஞானச்சுடர் வெளியீட்டில்*
*ஆசிரியர் இரா ஸ்ரீநடராசா அவர்கள்.*

மக்களின் ஆசை எப்போதும் குறைவதில்லை.

உ

# திருக்கைலாய வரவேற்பு உபசாரம்

திருமதி R. தயாமதி அவர்கள்

"தீயனவற்றை பார்க்காதே
தீயனவற்றை பேசாதே
தீயனவற்றை கேட்காதே"

என்றார் காந்திமகான். அதைவிட இவற்றைத் தெரிந்துகொண்டதால் நடந்தவற்றை சீரமைக்கத் தான் முடியுமா? அல்லது நடக்கப் போகின்றவற்றைத் தடுக்கத்தான் முடியுமா?

"எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்"

என்கிறது கீதை.

எனவே காலையில் எழுந்தவுடன் ஒரு கணமாவது இறைவனைத் தியானித்துவிட்டு மற்றய காரியங்களை தொடங்கவேண்டும் (தினப்பத்திரிகை வாசிப்பதோ, தொலைக்காட்சி பார்ப்பதோ, வானொலி கேட்பதோ, பொதுவிடயங்களை தெரிந்துகொள்வதோ வேண்டாமென்று கூறவில்லை)

எல்லா நாட்டிலும் பெரியவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நம் மதத்தில் பெரியோர்களை உள்ளபோதே தெய்வமாக எண்ணிக் கும்பிடுவார்கள். திருநாவுக்கரசரை, அப்பூதியடிகள் வடிவு தனைத் தான் காணாமலே கடவுளாக வைத்து வழிபட்டார். சுந்தரமூர்த்திசுவாமிகளை பெருமிழலைக் குறும்பர் கடவுளாக வைத்து வழிபட்டார். அத்துடன் நின்றுவிடாது அவர்களின் பரம்பரை பரம்பரை வழியாக போற்றுவது சைவசமயத்தின் பண்பாடாகும். திருக்கைலாய பரம்பரையை "வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் நான் ஒருவன் அன்றோ" என்பார் இராமலிங்க அடிகள். இன்னாருடைய சீடன் இன்னாருடைய சீடன் என்று வழிவழியாகவருகிற சம்பிரதாயம் எம்மிடமுண்டு. அவ்வழியே தான் ஆறுமுகநாவலரின் கந்தபுராணக் கலாச்சாரப் பரம்பரை இன்றும் மிளிர்கிறது. இவ் விடயத்தை திரு கிருபானந்தவாரியார் அவர்களே "கந்தவேள் துணை" என்னும் அவரது நூலின் முன்னுரையிலே சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறே நல்லூர் தேரடிச் சித்தர் பரம்பரை, சந்நிதியான் ஆச்சிரமம் சுவாமிகள் பரம்பரை என்று தொடர்கிறது.

எமது சமயம் இவ்வளவு வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்றால் அவற்றிற்கு காரணமாய் அமைந்தவர்கள் நாயன்மார்கள், சித்தர்கள், ஞானிகள், முனிவர்கள் போன்றோரே. அவர்கள் "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்பதற்கு ஏற்ப தாம் பெற்ற இறை இன்பத்தை நாம் பெற வழிசெய்ததோடு வாழ்வியல் முறைகளையும் வாழ்ந்து

புலன்களை அடக்கி ஆள்வதே நன்று.

காட்டிச் சிவபேறடைந்துள்ளார்கள்.

ஆடிமாத சுவாதியில் திருக் கைலை சேர்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைத் தினத்தை ஒட்டி "சைவசமயப் பாடத்திரட்டு". "வாரியார் வாக்கு" என்னும் நூல்களை ஆதாரமாகக் கொண்டு இக் கட்டுரையை வரைகிறேன்.

## சுந்தரமூர்த்தி நாயனார் .

சுந்தரமூர்த்திநாயனார் மிகப் பெரியவர். வேறு எந்த அடியார்களுக்கும் கைலாயத்தில் இருந்து வரவேற்பு வர வில்லை. ஞானசம்பந்தர், நாவுக்கரசர் முதலிய எல்லோரும் அவர்களாகவே மோட்சத்திற்கு போனார்கள். ஆனால் தமது 18ஆவது வயதில் திருவஞ்சைக்களத் திலே கைலாயம் போகலாம் என எண்ணி னார் சுந்தரப்பெருமான். சிவபெருமான் தனது வெள்ளை யானையை அனுப்பி னார். ஓலைகாட்டி அடிமை கொண்ட தம் பக்தனுக்கு தாம் ஏறும் அயிராவணம் என்ற வெள்ளை யானையை அனுப்பினார் என்றால் யாருக்கு இந்த கௌரவம் கிடைக்கும்?

ஒரு நாட்டின் பிரதமர் தன் நாட்டை காவல் செய்யும் ஒரு சிப்பாயை அழைப் பதற்கு கோடிக்கணக்கான பெறுமதி உடைய தனது வாகனத்தை அனுப்பு வாரா? ஆனால் ஓலைகாட்டி அடிமை கொண்ட சுந்தரருக்காக சிவபெருமான் தாம் ஆரொஹணிக்கின்ற 2000 தங்கங் களை உடைய வெள்ளை யானை அயிரா வணத்தை அனுப்பினார். இந்திரன் ஏறும் யானைக்கு அயிராவதம் என்று பெயர். அது நான்கு கொம்புகளை உடையது. பரமேஸ்வரன் ஆரொஹணிக்கின்ற அயிரா வணம் என்ற யானை, சுந்தரரை வரவேற் பதற்காக, இவ் மண்ணுலகம் வந்ததாம். நாமெல்லாம் சுந்தரரை தெய்வமாக நினைக்க வேண்டும்.

இவர் நால்வர்களுள் ஒருவர். நம் குருநாதர் சுந்தரரை வரவேற்க திருக் கைலாயத்தில் இருந்து வெள்ளை யானை வந்தது என்றால் சைவ சமயத்தவர்களா கிய எமக்கெல்லாம் பெருமைதானே! இலங்கை கிரிக்கற் அணியில் முத்தையா முரளிதரன் விளையாடுகிறார் என்றால் தமிழர்களாகிய எமக்குப் பெருமை யல்லவா?

சுந்தரரை வரவேற்க யார் யார் வந்தார்கள்? முப்பத்து முக்கோடி தேவர் களுக்கும் தலைவனான இந்திரன் றோயா மாலை கொண்டு வந்தாராம். ஸ்ரீமத் நாராயணர் வந்தார். ஆனால் அவர் மன தில் கொஞ்சம் வெட்கம். "ஒரு மனிதனை வரவேற்க நானா?" என்று பரமசிவன் சொன்னால் யாரால் மறுக்கமுடியும்.

ஒரு அதிபர் ஆசிரியர்களை பார்த்து "இன்ன இன்ன வகுப்புக்கு செல்லுங்கள்" என்றால் மறுக்கமுடியா? மறுத்தால் அப்பாடசாலையில் அவர்கள் தொடர்ந்து பணிபுரிய முடியுமா? அதே போல் கைலாசநாதர் சொல்கிறார். "நாராய ணன், இந்திரன், பிரமன் முதலிய எல்லோரும் சென்று சுந்தரரை அழைத்து வாருங்கள்" என்று. அவர்கள் போனார்கள்.

சேக்கிழார் வாக்கைவிட, சுந்தரர் வாக்குக்கு வலிமை அதிகம். காரணம், அவரே அவர் வாழ்க்கையைச் சொல் கிறார். காந்தி சத்திய சோதனை எனத் தம் சுயசரிதத்தை எழுதியிருக்கிறார்

**தூய்மையானவனே கடவுளை மிகவும் நெருங்குகின்றான்.**

அல்லவா? உ.. வே சுவாமிநாதஐயர் "என் வரலாறு" என எழுதியிருக்கிறார். இவர்கள் எல்லோரும் பொய் சொல்ல மாட்டார்கள், அப்படிச் சொல்வதால் இவர்களுக்கு என்ன லாபம்? சுந்தரப் பெருமான் பூவுலகில் கடைசியாகப் பாடிய தமிழ்வேதம் "இந்திரன் மால் பிரமன்" என்பதாகும். வள்ளலார் ஒரு பாட்டுப்பாடுகின்றார்.

"தா தா தா தா தா தா தாக் குறைக்கென் செய்வேன் நான்"

என்ற வெண்பா. இதில் ஏழு "தா" க்கள் உள, "எழுதாக் குறைக்கென் செய்வேன் நான்?" என்பது பொருள் ஒவ்வொருவர் தலையிலும் ஒவ்வொரு மாதிரி எழுதப்பட்டுள்ளது. அதையாராலும் மாற்றமுடியாது. ஐஸ்கிறீம் கடை வைத்திருக்கும் ஒரு முதலாளி வருவோர் எல்லோருக்கும் ஐஸ்கிறீம் கொடுத்து லட்சக்கணக்கில் பணம் சம்பாதிப்பார். அவருக்கு சக்கரை வியாதி, டாக்டர் ஒரு தேக்கரண்டி சீனிகூட சாப்பிடக்கூடாது என்பர். இது அவர் தலையெழுத்து. சிலருக்கு இரண்டு மூன்று அரிசி ஆலை இருக்கும் மூடை மூடையாக அரிசிவிற்று பணம் சம்பாதிப்பார். டாக்டர் "கேழ்வரகு ரொட்டிதான் சாப்பிடவேண்டும். அரிசிச் சோறு சாப்பிடக்கூடாது" என்பர். ஒவ்வொருவர் தலையிலும் ஒவ்வொரு மாதிரி எழுதியிருக்கும்.

இப்படி இந்திரன், மால், பிரமன் எழிலார் மிகு தேவரெல்லாம் வந்தெதிர் கொள்ள, மத்தயானை அருள்புரிந்து வந்தது என்றால், சுந்தரமூர்த்தி நாயனார் சந்தோஷமாக அல்லவா இருக்கவேண்டும். மத்தயானை என்றால் மதம் கொள்கின்ற கைலாயத்து யானை ஆகும். ஆனால் அவரோ "ஐயோ நான் உன் அடிமை. எனக்கு இத்தனை பெருமையா?" என்று அழுது தொழுதாராம். "கைலாய நாதன் அடியேனுக்கு வெள்ளை யானை வேண்டுமா? சுவாமி கட்டளையை மறுக்க முடியாது" என திருப்பஞ்சாட்சரம் சொல்லி 18 வயது இளம்பிள்ளை வெள்ளை யானை மீது ஏறிக்கொண்டார். ஒரு வினாடியில் கைலாசம் அடைந்தார். பரமேஸ்வரன் யானையில் அம்பாள் ஏறலாம், கணபதி ஏறலாம், சுப்பிரமணியர் ஏறலாம், யாரோ ஒரு பையன் அமர்ந்திருக்கிறானே! என்று ரிஷிகள் உற்றுப்பாக்கிறார்கள்.

சுந்தரருக்கு நல்ல அழகான மூக்கு, நிர்மலமான கண்கள், சாமுத்திரிகா லக்ஷணம் உடையவர். திடீரென பெரியவர்களை போய் "நீங்கள் யார்" என்று கேட்கக்கூடாது அது நாகரிகக் குறைவு அதனால் அந்த ரிஷிகள் பரமேஸ்வரனிடம் சென்று "உங்கள் யானை மீது யாரோ ஒரு சிறுவன் வருகிறானே அவன் யார்?" என்று கேட்டார்கள். மந்திரமாமுனிவர் "இவன் யார்?" என, சுவாமி, "இவன் நம்பளவன், நம்மவன்" என்று சொன்னார். இதை கேட்ட சுந்தரர் கண்ணீர் விட்டார். சுவாமி நீங்கள் எங்கே? நான் எங்கே? என்னை போய் தாங்கள் "நம்தமர் ஊரான்" என்றீரே என்று மனம் உருகினார்.

இதனிடையே சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ளை யானை மீது ஏறி திருக்கைலாயம் செல்வதை அறிந்த சேரமான் பெருமான் தமது குதிரை மீது ஏறி அதன் காதில் திருவைந்தெழுத்தை ஓதினார். அது ஆகாய மார்க்கமாக மேலே எழுந்து வெள்ளை யானையை வலம் வந்து வணங்கி அதன் முன்னே சென்றது. ஆரூரர் திருக்கைலாயத்தை அடைந்து "ஊனெனை முன்படைத்தான்" என

தொடங்கும் திருப்பதிகத்தை அருளி இறைவனைப் பணித்தார். பின்னர் தம் முடன் சென்ற சேரமானுக்கும் அருள் புரிதல் வேண்டுமென விண்ணப்பிக்க இறைவன் சேரமானைத் தமது கணங் களுக்கு தலைவராக இருக்கப் பணித் தருளினார். பரவையாரும், சங்கிலியாரும் முன்போல் உமாதேவியாருடன் சேர்ந்து சேடியராய் இருப்பாராயினர்.

தன்னிகரில்லா குருவான சுந்தர மூர்த்தி நாயனாரை குருவாகக் கொண்ட சேரமான் பெருமான் சிவபேறடைந்தது போன்று யாமும் அக்குருவை போற்றி உய்வோமாக.

## அறம்

மனிதராகத் தோன்றிய அனைவருமே மனித இயல்புகளோடு வாழ்ந்திடு வதில்லை. ஆனால் ஒவ்வொரு மனிதனும் மனிதனுக்குரிய உயர்ந்த தன்மைகளோடு வாழ்ந்திட வேண்டும் என்பதுதான் படைத்த இறைவனின் பெருநோக்கமாகும். இதனை உணர்வதற்காகவே தெளிந்த அறிவுடைய சான்றோர் பெருமக்கள் அவ்வப்போது அறநெறிகளைப் போதித்து மக்களை மேன்மைப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

உண்மையில் அறம் என்பது மாசற்ற மனத்தில் உதிப்பதாகும். மனிதகுலம் அனைத்திற்கும் இக்கருத்து பொதுவான ஒன்றாகும். எண்ணற்ற மதங்களும், மார்க்கங்களும் முடிவில் இதைத்தான் சிறப்பாக உணர்த்தி நிற்கின்றன. இதனையே உலகப்பொதுமறை தந்த தெய்வப்புலவர் திருவள்ளுவர்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற"

என கூறியுள்ளார்.

கல்வி கற்பதும், சமயநெறிகளில் தோய்வதும், ஆசாரச் சடங்குகளைக் கடைப்பிடிப்பதும் போன்ற யாவும் மன அழுக்கினைப் போக்குவதற்கான நல்ல பயிற்சியாகும். இந்த உயரிய நோக்கத்தை நெஞ்சினில் நிறுத்தி நடைமுறைப் படுத்தி வந்தால் நிச்சயமாக அறத்தின் பயனை அடையலாம்.

## இயன்ற அளவு தருமம்

நாளைக்கு அறம் செய்வோம், அடுத்த ஆண்டில் அன்னதானம் செய்வோம் என்றெல்லாம் எண்ணக்கூடாது. நமக்குப் பின்புறத்திலே கூற்றுவன் நிற்கின்றான். அவன் எந்த நிமிடத்தில் உயிரைப் பற்றுவானோ தெரியாது. உடம்போ நிலையில்லாதது. நீர் மேல் எழும் குமிழிக்கு நிகரானது. இன்றைக்கோ, நாளைக்கோ இன்னும் அரை நாழிக்கோ "என்றைக்கோ ஆவி இழப்பு" என்ற முதுமொழிகளை எண்ணிப்பார்த்து இயன்ற அளவு தருமத்தைச் செய்தல் வேண்டும்.

**நல்லநேரம் ஒருமுறைதான் வரும்.**

உ

# யாழ் வடமராட்சியில் தானே உதயமான கதிர்காம ஆலயம்

**திரு கே. கே. யோகேந்திரன் அவர்கள்**

வடமராட்சி தென்புலோலியூரில் தான் தோன்றியாக அமைந்ததலம் உபய கதிர்காமமாகும். வெண் கல்மலையில் சக்கர இயந்திர உருவுடன் முருகனாக அமைந்தது.

ஆலயமமைய காரண கர்த்தா வாக இந்திய தமிழ் நாட்டிலே திருநெல் வேலிப்பகுதியில் பாட்ட பத்துக்கிராமத்தில் குகானந்த நாயகி லோகாம்பாள் அம்மை யார் வாழ்ந்து வந்தார். 1909ஆம் ஆண்டு ஒரு நாள் அவருடைய கனவிலே முருகன் தோன்றி பின்வருமாறு கூறினார். பச்சிமப் புலவகான நகரத்திலே ஒரு விளாமரத்தின் பக்கத்திலே ஒரு கூர்மையான வெண்கல் பாறையிலே ஒரு சக்கரமொன்று அமைந் துள்ளது. நீர் அன்நகரிற்கு சென்று அச்சக்கரத்தை தரிசித்து அச்சக்கரத்தின் வடிவத்தை ஒரு தகட்டில் வரைந்து அதை உன்கிருகத்திற்கு கொண்டு வந்து பூசித்து வருவாயென்று திருவாய் மலர்ந்தருளினார்.

## சக்கரம் கண்டுபிடிப்பு

அம்மையார் சுற்றத்தாரொடு 1911ஆம் ஆண்டு பச்சிமப்புலவகான நக ரத்தை நாடி கொழும்பு வந்து சேர்ந்தார். அப்போது அவ்விடமிருந்த கைலாச பிள்ளை யாழ்ப்பாணம் மணியமாயிருந்த வி. எம் முத்துக்குமாரு முதலியார் ஆகி யோரின் உதவியால் கலியுகவரதனாகிய ஸ்கந்தமூர்த்தி சக்கர ரூபமாயவரித்த பச்சிமப்புலவர்கான நகரம் வந்தடைந்தார். புலோலி மேற்கிலிருந்த கு. சின்னப்ப உடையாரென்ற வேலாயத உடையாரும். உலாந்தா ஜி.சி. கணபதிப்பிள்ளையும் இன்னும் சில அன்பர்களும் இவருக்கு உறுதுணையாக திவ்விய மூர்த்தத்தை தேடிக் கண்டுபிடிப்பதற்கு உதவினார்கள். பதினொரு தினங்கள் வரை தேடி பன்னிரு கையன் கிருபையால் வைகாசிமாதம் விசாக நட்சத்திரத்தன்று யாவரும் தரிசிக் கும் பொருட்டு கண்டு பிடிக்கப்பட்டது. உடனே சுயம்புவான சக்கர சண்முக மூர்த்திக்கு அபிஷேகம் அர்ச்சனையும் செய்தார். பின் சக்கரத்தை தகட்டிலே வரைந்து கொண்டு திருநெல்வேலி திரும்பினார்.

## உபய கதிர்காமம்

இறைவன் சித்தத்தால் லோகாம் பாள் அம்மையாரின் வேண்டுகோளுக் கிணங்க இப்புண்ணிய ஸ்தலத்திற்கு உபயகதிர்காமம் என்று பெயரிடப்பட்டது. இவைதான் இம் முருகனின் அற்புத தோற்றம் பற்றிய வரலாறாகும். தென்னிந் திய அடியாள் மூலம் ஈழத்திலே தென் புலோலி நகரிலே அந்த அடியாளைக்

**வறுமையே நல்ல காரியத்திற்கு விளைநிலம்.**

கொண்டு ஆலயமைப்பித்த புதுமை வேறெங்குமே இடம் பெற்றதில்லை. அன்று சக்கரம் அமைந்த பாறைக்கு அடையாளமாயிருந்த விளாமரம் இன்று இல்லை. ஆனால் அதனருகே இன்னோர் விளாமரம் தானே தோன்றி வளர்ந்து நிற்கின்றது.

சுயம்புவான சக்கர சண்முகனுக்கு அருகே சுயம்புவான விளாத்தீஸ்வரனும் அமர்ந்து அருள்புரியும் அற்புதத் திருத் தலமே உபயகதிர்காமமாகும்.

## தலவிருட்சம்

மனிதன் தனக்கும் பயனளிக்கும் அனைத்துச் சக்திகளையும் வழிபட்டான். இதன் அடிப்படையிலேயே மரவழிபாடும் ஆரம்பமானது. இவ்வாறு வழிபாட்டுக் குரிய தன்மையைப் பெற்ற மரங்கள் காலப்போக்கில் தலவிருட்சங்களாக சிறப்புப்பெற்றன.

இத்தலத்தில் விளாத்தி மரம் விளாத்தீஸ்வரர் என்று நாமத்தோடு வணங்கப்படுகிறது. இதற்கு மூன்று கால நேரங்களிலும் பூசை நடைபெறுகின்றது. இவ்விளாமரம் தற்போது தானே முளைத்து மரமாக காட்சி தருகின்றது. ஆனால் அன்று சக்கரம் அமைந்த பாறைக்கு அடையாளமாய் அமைந்திருந்த விளாமரம் இன்று இல்லை. இவற்றை "வ்ளாத்தியான்" விளாத்தீஸ்வரர் என்று அடியார்கள் வணங்கி வருகின்றனர். இதன் அருகிலே கடம்பு, வேம்பு, அரசு, வில்லை, ஆல், இலுப்பை போன்ற மரங்களும் இருக்கின்றன.

## வல்லிபுரம்

ஊர் பெயர் ஆராய்ச்சியின் கருத் துப்படி ஆலயத்தின் அருகில் "குடகம் புரை" என்ற இடம் உண்டு (குடகம் - மலை: புரை - தேவாலயம்) மலைத் தேவாலயம் என பொருள் தருகின்றது. இவ்வாலயமும் மலைத்தொடர்களாக நிலத்தின் கீழ் உள்ளன. ஏற்கனவே இவ்விடம் கடல் அழிவினால் தாழ்ந்திருக் கலாம். வரலாறு மிக்க சிங்கை நகரின் இராஜதானியாக விளங்கிய வல்லிபுர ஆலயம் இதன் கிழக்கெல்லை என்பது சிந்திக்கப்பாலது அண்மையில் (15.08. 2005) வல்லிபுரக் கோவில் பகுதியிலமைந் துள்ள புனித நகர்பகுதியில் முன்பள்ளி கட்டுவதற்காக துப்பரவு வேலைகள் இடம்பெற்றது. புராதன அடிச்சுவடுகளான சிங்க ராஜ ஆட்சி செய்த காலத்தில் சுடுமண் கற்களால் அமைக்கப்பட்ட கிணறு கண்டு பிடிக்கப்பட்டது. இதற்கு முன்னர் 200 வருடங்களுக்கு முன்னே பெரிய தேவனத்தாய் ஆலயத்தின் மூலஸ் தான விநாயகர் விக்கிரகம் அருகில் உள்ள கிணறு வெட்டும் போது எடுக்கப்பட்டது.

சங்ககாலத்தில் நிலங்களை ஐந் தாக வகுத்து அந்த நிலங்களின் தன்மைக் கும் இயற்கைத் தோற்றத்திற்கும் ஏற்ற வாறு கடவுளுக்கு திருவும் உருவும் பெயரும் இட்டனர். இதில் மலையும் மலைசார்ந்த இடமுமான குறிஞ்சியில்

**பிறருக்கு நீ உதவியதை நினைக்காதே.**

முருகனை வழிபட்டு வந்தனர். முருகப் பெருமானை முதற்பெரும் தெய்வமாகக் கொண்டு வழிபடும் நெறி கௌமார நெறியாகும்.

மேற்படி வல்லிபுரம் ஆனைவிழுந் தான் போன்ற இடங்களில் சுடுகலங்கள் பூர்வகால கல்லோடுகள், கீச்சுக்கண்டம் சிலவற்றை பேராசிரியர் சணபதிப்பிள்ளை, பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, பேராசிரி யர் வி. கிருஷ்ணராசா ஆகியோர் தமது ஆய்வு மூலம் கண்டு பிடித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

வரலாற்று சிறப்புமிக்க சிங்கை நகரின் இராஜதானியாக விளங்கிய வல்லிபுர ஆலயம் இதன் கிழக்கு எல்லை என்பது சிந்திக்கப்பாலது. இவற்றை சீர்தூக்கி பார்க்கும் போது பண்டைய காலத்தில் இப்பிரதேசத்தில் ஓர் ஆலயம் இருந்து அழிந்திருக்கக்கூடுமென ஊகிக்க முடிகிறது.

## திருப்புகழ் பாடிய திருத்தலம்

உபயகதிர்காம முருகன் தலத் தின்மீது ஸ்ரீமத் அருணகிரிநாத சுவாமிகள் கிளியுரு எடுத்து பல தலங்கள் தரிசித்தும் இத்தலத்துக்கும் எழுந்தருளி திருப்புகழ் பாடியுள்ளார். அது கிளிப்பாடு பூதியில் வருவோனே எனப் பாடியதும் அது பற்றி வன்னி மங்கலம் என்னும் சிறப்புப் பெயர் உள்ளது "யாழ் ஆயன் பட்டின மருவிய பெருமாளே" என திருப்புகழ் பாடினார் என இத்தல ஆய்வாளரின் கருத்தாகும்.

தென்பகுதியில் கதிர்காம முருகன் ஒருயந்திரப் பெட்டியிலே இருந்து அருள் புரிகின்ற அவ்வேளையிலே தென்புலோலி உபயகதிர்காமத்திலும் சக்கரயந்திர வடிவிலே திருவருள்புரிகின்றார். தென்பகுதி கதிர்காம உற்சவ காலத்திலே இத்தலத் தில் உற்சவம் ஆரம்பமாகின்றது. தீர்த் தோற்சவம் பூரணை தினத்தன்று நடை பெறும். தென்பகுதி கதிர்காமத்துக்கு செல்ல முடியாத பக்த அடியார்கள் வந்து வணங்கி செல்கின்ற முறையினை இங்கு காணலாம்.

## ஆறுதல் தருவதாக.....

இன்று பயம், பதட்டம், அவலம், துன்பம், ஆபத்து என மிக நெருக்கடியான காலகட்டத்தில் இந்த மண்ணில் நாம் வாழுகின்றோம். இதனால் அனைவரும் துன்பத்திற்குள் சிக்கித் தவிக்கின்றோம். ஆனாலும் சந்நிதியானது சந்நிதானத்திற்கு வருவதனாலும் இங்கே இடம்பெறும் ஞானச்சுடர் மலர் வெளியீடு போன்ற ஆன்மீகச் செயற்பாடுகளில் பங்கு பற்றுவதனாலும் ஞானச்சுடர் சஞ்சிகையை வாசிப்பதனாலும் எமது மனம் ஆறுதல் அடைவதை நாம் உணருகின்றோம். ஆகவே இவை போன்ற ஆன்மீகச்செயற்பாடுகளும் ஆண்டவனது சந்நிதானங்களுமே எமக்கு ஆறுதலைத் தரமுடியும் என்பதை உணர்ந்து நாம் செயற்படுவதே பொருத்தமானது.

*புரட்டாதிமாத மலர்வெளியீட்டு நிகழ்வில்*
*ஆசிரியர் துரை. கணேசமூர்த்தி அவர்கள்.*

**உண்ணும்போது மௌனமாயிருக்கப்பழகு.**

உ

(தொடர்ச்சி...

# தவமுனிவனின் தமிழ் மந்திரம் (கட்டுரைத்தொடர்-3)

திரு சிவ. மகாலிங்கம் அவர்கள்

இந்துக்கள் எல்லோரும் தமது வழிபாட்டில் முதலில் விநாயகப் பெருமானையே வழிபடுகிறார்கள். இடையூறுகளை நீக்குபவரும் எடுத்த கருமங்களைக் கைகூடச் செய்பவரும் கணபதியே என்பதனால் நாம் முதலில் அவரை வணங்குகின்றோம். இதனாலேயே அவருக்கு விக்கினேஸ்வரன் என்ற பெயர் ஏற்பட்டது. தவயோகி திருமூலநாயனாரும் தனது திருமந்திரப் பாடல்களை அருளுவதற்கு முன்புகாப்புச் செய்யுளாக விநாயகப் பெருமானைப் பாடித் துதிக்கின்றார். சிவபெருமானுக்குரிய பெயர்களில் நந்தி என்பதும் ஒன்றாகும். திருமூலர் பல இடங்களில் சிவபெருமானை 'நந்தி' என்ற பெயராலேயே பாடுகின்றார். ஞானத்தின் சிகரமாய் விளங்கும் விநாயகப் பெருமானைப் பக்தி உணர்வோடு வழிபடுகிறவர்களுக்குச் சகல ஞானமும் எளிதில் கிடைத்துவிடும். சிவனிலிருந்து வேறாகாத சக்தியாகவே விநாயகப் பெருமானைச் சைவர்கள் அனைவரும் வழிபடுகிறார்கள். இவருடைய ஐந்து கரங்களும் பஞ்சகிருத்தியங்களைக் குறிக்கின்றன. பாசத்தை வைத்துள்ள கை படைப்புத் தொழிலையும் தந்தம் ஏந்தியகரம் காத்தலையும், அங்குசம் தாங்கிய கை அழித்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் அருளலையும் குறித்து நிற்கின்றன. ஐந்து கரங்களையும், யானையின் முகத்தையும், இளம்பிறைச் சந்திரனைப் போன்ற தந்தத்தையும் உடைய சிவனின் மைந்தன் ஞானச் சிகரமாகவும் விளங்குகின்றான். இத்தகைய பெருமானை மனத்தில் வைத்து அப்பெருமானின் திருவடிகளை வணங்குகின்றேன் என்ற பின்வரும் பாடல் அனுபூதி நிறைந்த அருட்பாடலாகக் காணப்படுகிறது.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

கடவுள் வாழ்த்து என்ற பகுதியிலே ஐம்பது பாடல்களும், வேதச் சிறப்பு என்ற பகுதியிலே ஆறுபாடல்களும், ஆகமச்சிறப்பு என்ற பகுதியிலே பத்துப் பாடல்களும் காணப்படுகின்றன. கடவுள் வாழ்த்தின் முதல் இருபத்தைந்து பாடல்களில் இறைவனின் பொது இயல்பினைக் கூறி, பின்வரும் பாடல்களில் இறைவனின் சிறப்பியல்புகளைக் கூறி, திருமூலர் இறைவனை உபாசிக்கின்றார். சித்தர்களுடைய வாக்கில் எப்பொழுதும் ஒரு தனித்தன்மை காணப்படும். சிலசமயம் ஏதோ வேடிக்கை பேசுவது போல இருக்கும். அந்த வேடிக்கையினுள் ஆழமான தத்துவங்கள் பொதிந்து காணப்படும். குழந்தைகளுக்கு ஒன்று இரண்டு என்று எண்சுவடிக்

**குற்றத்தை மறைத்தல் கோழைத்தனம்.**

கணக்குச் சொல்வது போல இறைவனுடைய இயல்புகளைக் கடவுள் வாழ்த்தின் முதலாவது பாடலில் விளக்குகின்றார்.

ஏகம்ஸத் (உள்பொருள் ஒன்றே) என்ற உபநிடத மகாவாக்கியத்திற்கு அமைவாகப் பரசிவசோதிப் பிழம்பாகக் காட்சி தருகின்ற இறைவன் தனது ஆற்றலை அருட்சக்தியை ஆன்மாக்களுக்கு வழங்கிச் செயற்படும் நிலையில் சக்தியாகவும் விளங்குகின்றான். அம்மையப்பனாகவும் உமையொரு பாகனாகவும் சைவர்கள் இந்த வடிவத்தினை வழிபடுகிறார்கள். ஒன்றவன் தானே என்ற பாடலை ஆரம்பித்தவர் இந்நிலையை இரண்டவன் இன்னருள் என விளக்குகின்றார். படைத்தல். காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களைச் செய்யும் நிலையில் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவகை வடிவங்களிலே காட்சி தருகின்றார். நான்கு வேதங்களை உணர்த்தும் விழுமிய பொருளாகவும் காட்சி தருகின்றார். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐம்புலன்களையும் வென்ற நிலையில் அறிவிக்காமல் அனைத்தையும் அறிபவனாகத் திகழ்கின்றார். யோக சாஸ்திரங்கள் மனித உடம்பினுள் இருக்கும் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகிய ஆறு ஆதாரங்கள் பற்றியும் குறிப்பிடுகின்றன. இந்த ஆறு ஆதாரங்களிலும் ஆறு வகையான ஆற்றல்கள் தொழிற்படுகின்றன. ஒன்றாகக் காட்சி தரும் இறைவனே ஆறு ஆதாரங்களிலும் விரிந்து நின்று செயற்படுகின்றான். இந்த ஆறு ஆதாரங்களுக்கும் அப்பால் ஞானப் பெருநிலை என்ற ஒன்று இந்த உடம்பின் உள்ளே இருக்கிறது. இதனை ஆகாசம் என்றும் சிதம்பரம் என்றும் ஞான மன்றம் என்றும் பல பெயர்கொண்டு அழைப்பார்கள். இவ்வாறு ஏழாவது உம்பர் (உம்பர் - ஆகாசம்) வரை சென்று நிற்பதும் இறைவனே என்பதை ஏழும்பர்ச் சென்றனன் என்று குறிப்பிடுகின்றார். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், இயமானன் ஆகிய எட்டுப்பொது நிலைகளாகவும் இறைவன் உணரப்படுகின்றான் என்பதை எட்டுணர்ந்தான் எனக் குறிப்பிடுகின்றார். அஷ்டமூர்த்தி சொரூபமாக உணரப்பெற்று அவற்றுள் கலந்திருக்கிறான். இறைவன் என்பதை இது உணர்த்துகிறது. இவ்வாறு இறைவனின் பல்வேறு வியாபக நிலைகளையும் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

ஒன்று அவன் தானே; இரண்ட அவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள்; நான்கு உணர்ந்தான்; ஐந்து
வென்றனன்; அறுவிரிந்தனன்; ஏழு உம்பர்ச்
சென்றனன்; தான் இருந்தான் உணர்ந்து எட்டே

பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்களும் தமிழர்களின் சிந்தனையில் முகிழ்த்த உயர் தத்துவமாகிய சைவசித்தாந்த தத்துவமும் சிவனையே முழுமுதற் கடவுளாகக் காட்டுகின்றன. சிவனைவிட மேலான தெய்வம் உலகில் எங்கு தேடினும் இல்லை. தனக்குவமை இல்லாத

**தன்னை மதிப்பவன் பிறரையும் மதிப்பான்.**

பெரியவனாக விளங்கும் சிவன் அண்ட மெல்லாம் கடந்து நின்று பொன்போல ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றான். அடியவர்க்கு எளியவனாகிய இறைவன் மெய்யன்பர்களின் அன்பால் விளங்கும் நெஞ்சத் தாமரையில் வீற்றிருந்து அருள்புரிவான் என்பதைத் தவமுனிவரின் பின்வரும் திருமந்திரப் பாடல் உணர்த்துகிறது.

சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் வேறில்லை
அவனோடொப்பார் இங்கு யாருமே இல்லை
புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடை முடித் தாமரையானே.

இறைவன் தன்னுடைய அடியவர்களின் பாவங்களையும் இன்னல்களையும் தீயைவிட மிக வேகத்துடன் எரிப்பான். பக்தர்களுக்கு அருள் செய்வதில் தண்ணீரை விடக் குளிர்ச்சியானவன். இத்தகைய பரம கருணாநிதியாகிய இறைவனின் திருவருளின் தன்மையை உள்ளபடியாரும் அறிகிறார்கள் இல்லையே எனத் தவயோகி உருக்கத்தோடு வருந்திக் கூறுகின்றார் குழந்தைகளின் உள்ளம் அப்பழுக்கற்றது, தூய்மையானது. மழலைகளின் சிரிப்புத்தான் தெய்வத்தின் சிரிப்பாகக் காணப்படுகிறது கணக்குப் போட்டுப் பார்த்து, இலாபம் கருதி வழங்குகிற அன்பு குழந்தைகளிடம் இல்லை. குழந்தைகளின் அன்பு கூட வயது முதிர்ந்ததும் மாறுதல் அடையும். ஆனால் இறைவன் தனது அடியவர்களிடம் கொண்டிருக்கும் அன்பு அப்படிப்பட்டது அன்று என்பதைச் "சேயினும் நல்லன்" எனக் குறிப்பிடுகின்றார். குழந்தைகள் போல இறைவனிடம் அன்பைச் செலுத்துகின்ற அன்பர்களுக்கு இறைவன் தாயைப் போலவும், தாயை விடவும் அன்பு செலுத்துகின்றான். நீண்ட சடையோடு கூடிய சிவபெருமானே தாயினும் நல்ல தலைவனாக நின்று அடியார்களுக்கு அருள் புரிகின்றார்.

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறிவார் இல்லை
சேயினும் நல்லன் அணியன் நல்லன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ் சடையோனே

இறைவனை எந்த மார்க்கத்திற் சென்று வழிபட்டால் அவனை அடையலாம் என்ற சந்தேகம் அடியார்களுக்கிடையே ஏற்படுவதுண்டு. எந்தத் தெய்வ வடிவத்தை வழிபடலாம். எவ்வாறு வழிபடலாம். எனச் சிந்திக்கும் பக்தர்களுக்குத் திருமூலர் தனது பாடலில் நல்லதொரு விடையினைத் தந்திருக்கின்றார். வழிபாட்டு நெறியில் தூய்மையும் உறுதிப்பாடும் இருத்தல் அவசியம் என்கிறார். எல்லா உயிர்களுக்கும் தந்தையாக விளங்குபவனும், நந்தி என்ற திருநாமத்தை உடையவனும், ஆனந்த அமுதுமாகத் திகழ்பவனும் தனக்கு ஒப்புவமை இல்லாதவனுமாகிய இறைவனை நாம் எந்த வடிவில் வழிபட்டாலும் அவனது அருளைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது தவயோகி திருமூலநாயனாரின்

கருத்து ஆகும்.

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
ஏப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசீசன் அருள்பெறலாமே.

கடவுள் பலர் என்று இந்து சமய நூல்கள் எதுவும் கூறவில்லை. ஏகம் ஸத் விப்ரா பகுதா வதந்தி (உள்பொருள் ஒன்றே அறிஞர்கள் அதனைப் பல என உரைத்து விட்டனர்) என்பது வேதவாக்கியம் ஆகும். ஆனால் கடவுளுடைய உருவங்கள் பல என்றும் அவைகளை வழிபடுகின்ற முறைகள் பல என்றும் கூறப்பட்டுள்ளது. எந்தத் தெய்வத்தை எந்த உருவில் வழிபட்டாலும் அவ் வணக்கம் மாதொரு பாகனாகிய சிவனையே சேரும் என்பதை,

யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவர்

என்று சிவஞான சித்தியார் கூறுகிறது.

சைவ சமயத்தவர்கள் வேதத்தைப் பொதுநூலாகவும் ஆகமத்தைச் சிறப்பு நூலாகவும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். வேதத்தை மந்திரம் என்றும் ஆகமத்தை தந்திரம் என்றும் கூறுவது பெரியோர் மரபு. "மந்திரமும் தந்திரமும் ஆயினான் காண்" என இறைவனை அப்பர்பெருமானின் தேவாரப் பாடலும் குறிப்பிடுகிறது.

வேதத்தைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு ஆறு நூல்கள் இருக்கின்றன. வேதம் உடம்பானால் அதற்கு ஆறு அங்கங்களாக அந்த ஆறு நூல்களும் காணப்படுகின்றன. இந்த ஆறு நூல்களும் வேதாங்கம் என்ற பெயரால் அழைக்கப்படும். வேதத்தின் முடிபாக இருப்பது உபநிடதம். இதனை வேதசிரசு என்று சொல்வார்கள். முடிந்த முடிபாகிய பொருளை அந்த வேதாந்தம் குறிப்பிடுகிறது. மனிதன் பகுத்தறிவு உடையவன். அவனுடைய அறிவினால் ஆராயும் அளவைகளுக்கு எல்லை உண்டு. நமது அறிவினால் மட்டும் இறைவனைக் காணமுடியாது. இறைவனை அடைய வேண்டுமென்று பக்தி உண்டாவதற்குரிய அறிவு வளர்ந்த பின்பு சாதனாமார்க்கங்களி னூடாக அனுபூதி நிலையை அடைகின்ற பொழுதுதான் இறையருள் அகத்திலே பிரகாசிக்கும். ஆய்வு கூடங்களில் பரிசோதனைக்கு உட்படுத்தி முடிபுகளைப் பெறுவது போல இறைவனைக் காணமுடியாது.

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும்
மிக்குச் சோதிக்க வேண்டா

என இந்த உவமையை ஞானசம்பந்தரும் தனது பாடலிற் குறிப்பிடுகின்றார். இறைவனால் அருளப்பட்ட வேதம் தர்க்கம் செய்கின்ற அறிவுக்கு அப்பாற்பட்டு உண்மையைச் சொல்கிறது. வேதத்தில் நமது வாழ்க்கைக்கு வேண்டிய அறங்கள் யாவும் கூறப்பட்டுள்ளன. இறையருள் பெற்ற அனுபூதிச் செல்வர்கள் தமது வாதத்தை விட்டு எல்லாப் பொருளும் நிறைந்த வேதத்தை ஓதியே முத்தியைப் பெற்றார்கள். இதனை வேதச் சிறப்பு என்ற முதற்பாடலில் திருமூலர் குறிப்பிடுகிறார்.

**பெருமனம் உள்ளவருக்கு உலகமே குடும்பம்.**

வேதத்தை விட்ட அறமில்லை; வேதத்தின்
ஓதத் தகும் அறம் எல்லாம் உள; தர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே.

இறைவனை வாழ்த்துவதற்கும் வணங்குவதற்கும் உரிய மொழி என்று எதுவுமே வரையறை செய்யப்படவில்லை. இறைவன் ஒலி வடிவாகவும் ஒளி வடிவாகவும் இருப்பான் என்றே வேதங்கள் கூறுகின்றன. "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்று அப்பர் பெருமானும் நாதவிந்து கலாதீ நமோ நம" என்று அருணகிரியாரும் இறைவனை நாத வடிவினனாகக் கண்டு துதிக்கிறார்கள். பாஷைகள் எல்லாமே தெய்வத்தின் பேச்சு, இவற்றில் உயர்வு தாழ்வு கூறித் தர்க்கம் செய்வது அறிவீனம் என்று திருமூலர் தனது பாடலில் அழுத்திக் கூறுகின்றார். திருமூலர் காலத்தில் பாரதநாட்டில் பதினெட்டுப் பாஷைகள் வழக்கில் இருந்தன இவர் பதினெட்டுப் பாஷைகளையும் கற்றுத் தேர்ந்த அறிஞராகத் திகழ்ந்தார். பதினெட்டு மொழிகளையும் அறிந்த இவர் ஆகமம் கூறும் பொருளை நன்கு உணர்ந்தவராகவும் இருந்தார். எல்லா மொழிகளும் இறைவனுடைய மூச்சுக்காற்றே என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் குறிப்பிடுகின்றது.

பண்டிதர் ஆவார் பதினெட்டுப் பாஷையும்
கண்டு அவர் கூறும் கருத்தறிவார் என்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாஷையும்
அண்ட முதலான் அரன் சொன்னவாறே

(தொடரும்....

## சாப்பிடத் தொடங்குமுன்

எல்லோரும் மூன்றுவேளை சாப்பிடுகிறோம். சிலபேர் நாலுவேளை, இன்னும் சில பேருக்கு எத்தனை வேளை என்று அவர்களுக்கே தெரியாது. எல்லோருக்கும் மூன்று வேளை என்றே வைத்துக்கொள்வோம். சாப்பிடத் தொடங்கு முன் இப்போ நான் சொல்லப் போகிற நான்கு வரிகளைச் சொல்லிவிட்டுச் சாப்பிடுங்கள்.

அருமறைகளே நினைந்து மனுநெறியிலே நடந்து
அறிவை அறிவாலறிந்து உன் அடியார்போல்
அகிலபுவனாதியெங்கும் வெளியுற மெய்ஞ்ஞான இன்ப
அமுதை ஒழியாதருந்த அருள்வாயே

- திருப்புகழ்

*- கிருபானந்தவாரியார் -*

**கடவுளைத் தவிர உயர்ந்த துணை வேறில்லை.**

உ

# கந்த ஷஷ்டி விரதம்

செல்வி ச. சரவணமுத்து அவர்கள்

கந்தஷஷ்டி விரதமானது முருகனை வேண்டி அனுட்டிக்கும் விரதமாகும். மும்மலநீக்கத்தினைக் கருதுவதாகவும், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னுங் குற்றங்களினின்றும் நீங்கவேண்டியும், முருகனை வேண்டி ஆறு நாள்கள் தொடர்ந்து அநுட்டிக்கப்படுவது கந்தஷட்டி விரதமாகும். புத்திரப்பேறு கருதியும் இந்தவிரதம் அநுட்டிக்கப்படும். லௌகீக விருப்புக்கள் எதனையுஞ் சிந்திக்காத வகையிலும் இந்த விரதத்தினை அநுட்டிப்பவர்களும் உ ளர்.

ஆணை, உறுதி, இலட்சியம், நோன்பு முதலான கருத்துக்களைத் தருவதொரு சொல் விரதம், 'மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான உண்டி சுருக்கல்...' என்பதொரு தொடரினைத் திருக்குறளில் தவம் என்னும் அதிகாரத்திற்குப் பரிமேலழகர் எழுதியுள்ள அதிகார அறிமுகக் குறிப்பிற் காண்கின்றோம். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளையும் அவற்றின் இச்சைவழிப் போகவிடாது அடக்கவல்ல மனத்தினை நெறிப்படுத்தும் வகையில் உணவைச் சுருக்கியோ அல்லது உணவைத் தவிர்த்தோ உடல் ஊக்குவிப்பைக் குறைப்பது கொண்டு மனம், வாக்குக் காயம் என்பவற்றால் இறைவனைச் சிந்தித்துப், போற்றிப் பிரார்த்தித்து வீழ்ந்து வணங்கி, அல்லது அங்கப்பிரஷணம் செய்து அடியழித்து வழிபட்டு எந்த வேளையும் இறை சிந்தனையுடனாகி நிற்கவைப்பன விரதங்கள் என்பது துணிபு. அந்த வரிசையில் அமைந்த உத்தமமான விரதந்தான் கந்தசஷ்டி சிவதீட்சை பெற்றவர்கள் மட்டுந்தான் இந்த விரதத்தினை அநுட்டிக்கமுடியும் அவர்கள் தாம் சைவசமயிகள் என்பது இந்த இடத்துக் கருத்தாகும்.

இவ்வகை வழிபாடுகள் இருவேறு வகையினவாக அமையும். ஒருவகை. தமது சொந்தத் தேவையின் பொருட்டு அநுட்டிக்கப்படுபவை. மற்றொரு வகை எல்லோர்க்கும் நலம் வேண்டி அநுட்டிக்கப்படுபவை.

மேன்மை கொள் சைவநீதி விளங்கவேண்டும். குறைவிலாது உயிர்கள் வாழவேண்டும் எனும் புராணச் செய்தியைப் பாராயணஞ் செய்து இன்புறுவோம். "வாழ்க அந்தணர்..." என்று தொடங்குந் திருப்பாடலும் அவ்வகை அமைதியுடையது. 'உடலுள் உறு சூலை தவிர்த்தருள்வாய்.' என்னுமிடத்து ஒருவருக்காக வேண்டுதல் செய்வது என்று புலனாகின்றது. இவ்வகை வேண்டுதல்கள், நிகழும் விரதங்கள், திதியை ஆதாரமாகக் கொள்வனவென்றும், ஆகமங்களை ஆதாரமாகக் கொள்வனவென்றும் அமைகின்றன. கந்தஷஷ்டி விரதம் ஐப்பசி வளர்பிறைப் பிரதமை தொடக்கம் ஷஷ்டி ஈறாகவரும் ஆறு தினங்கள் அநுட்டிக்கப்படுவது. அசுரர்களுடன் கடுஞ் சமர்புரிந்து கந்தப்பெருமான் சூரபதுமனை வதஞ்செய்தருளிய காலம் அது.

அழியாத புகழும், செல்வமும் அறமே தரும்.

சிவன் மருமகனாக வந்தமையை நினைத்து இறுமாந்து சிவநிந்தனை செய்யும் வகையில் தக்கப்பிரஜாபதி ஒரு யாகஞ் செய்கின்றான். சிவனுக்கு முதன்மை இல்லாதயாகம். தக்கனுக்குப் பயந்த தேவர்கள் சிவநிந்தையுடனான இந்த யாகத்திற்கு வருகை தந்து பார்த் திருந்தனர். அந்தக் குற்றங் காரணமாகப் பின்னொருகால் சூரபதுமனால் துன்புறுத் தப்பட்டனர். சிவனை வேண்டுதல் செய்து, நோன்புகள் பல அநுட்டித்து அவன் பெற்ற வரங்கள் சூரபதுமன் மதியைக் கூர்ப்படையச் செய்வதற்கு மாறாக உண்மை அறிவைப் பிரகாசிக்கவிடாது மழுங்கடித்து விட்டன. கொடுரம் மலிந்த உள்ளத்தினனாய் ஆணவத்தின் வடிவ மென நின்றான்.

கன்மமலம், மாயாமலமெனச் சிங்கன், தாரகன் எனுந் தம்பியர் இருவர். முழு முதலென்ன முருகனையும் ஆன்மாக் களெனத் தேவர்களையுங் காணவைக் கின்றது கந்தபுராணம்.

“மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொளாமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமலமூர்த்தி
அறுமுக வுருவாய்த் தோன்றி அருளொடு சரவ ணத்தின்
வெறிகமழ் கமலப் போதின் வீற்றிருந் தருளினானே!”

எனும் கந்தபுராணத் திருப்பாடல் சூரபதுமன் முருகனைக் காணுமாறு கூறு கின்றது. தேவர்களைச் சிறை கொண்ட தனாற் கிடைத்த பெருவாழ்வு என அந்தச் சந்தர்ப்பத்தில் சூரபதுமன் எண்ணுகின் றான். சூழுதல் வேண்டும், தொழுதிடல் வேண்டும், துதித்திடல் வேண்டும் என்று அவன் மனம் சபலமடைகின்றது. ஆனால் மானம் என்பதொன்று தடை செய்கின்றதே என்று வருந்துகின்றான்.

இந்த வகையிலும் சூரன், தாரகன், சிங்கன் என்போர் வலுவை இழந் தனர். ஐப்பசி மாத வளர்பிறைக் கால முதல் ஆறு நாட்கள் தான் அவர்கள் உடல்வலு இழப்பிற்குரிய காலமாக அமைந்திருந்தது. அதே காலம் முனிவர் கள் தேவர்கள் என்போரால் விரதகால மாகக் கொள்ளப்பட்டது.

“வெற்பொடும் அவுணன் தன்னை ஒட்டிய தனிவேற் செங்கை
அற்புதன் தன்னைப் போற்றி அமரரும் முனிவர் யாருந்
சொற்படு தலையின் திங்கட் சுக்கில பக்கந் தன்னில்
முற்பக லாதி யாக மூவிரு வைகல் நோற்றார்.”

என்று கந்தபுராணங் குறிப்பிடும். அந்தக் காலமே மானுடரின் விரத காலமும் ஆயது. தலையின் திங்கள், ஐப்பசி மாதம், சுக்கிலபக்கம், வளர் பிறைக் காலம், முற்பகலாதியாக மூவிரு வைகல், ஆரம்பந் தொடக்கமாக ஆறு தினங்கள். ஐப்பசி மாதத்து வளர்பிறைக் காலத்து ஆரம்பம் தொடக்கமாகப் பிர தமைத் திதி தொடக்கமாக ஆறுதினங்கள் அதாவது ஆறாவது தினமாகிய சஷ்டி இறுதியாக என்பது பெறப்படும்.

இந்த சஷ்டி அநுட்டானத்தை விரும்புபவர்கள் ஆரம்பிக்கும் காலத் திலிருந்து ஆறு வருடங்களோ அல்லது

**முரண்பாடுகள் இல்லாமல் வாழ்க்கை இல்லை.**

பன்னிரண்டு வருடங்களோ தொடர்ந்து கைக்கொள்ளவேண்டும் எந்த விதிக் கமைய முதலாண்டில் விரதம் அநுட்டிக் கப்பட்டதோ அஃதே போன்று தொடரும் ஆண்டுகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டும். அதாவது முதலாம் ஆண்டில் ஆறு நாட்களும் உபவாசமிருந்து விரதம் அநுட்டிக்கப்பட்டிருந்தால் தொடரும் ஆண்டுகளிலும் அவ்வண்ணமே அநுட் டிக்கப்பட வேண்டும் என்பது. முதலாண் டில் எல்லா நாட்களும் மதிய உணவு மட்டும் உண்டு விரதம் அநுட்டிக்கும் முறைமை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் தொடர்ந்த ஆண்டுகளிலும் அந்த நியதி யையே தொடரவேண்டும். அதாவது ஆண்டின் முடிவிலோ அல்லது பன்னிரண் டாவது ஆண்டின் நிறைவிலோ விரதோத் தியானத்துடன் நோன்பு பூரணப்படுத்தப் பட வேண்டும். விரதோத்தியானம், விரத முடிவிற் செய்யப்படும். கிரியை, கந்த சஷ்டி விரதோத்தியானம் முருகன் கோயி லில் இடம்பெறுவது நல்லது. தான் கைக் கொண்ட விரதத்தின் மூலம் தனக்குப் பொருத்தமான பயன் கிடைக்கவேண்டு மெனச் சிறப்பாக வேண்டுதல் செய்து சங்கற்பித்தல் அவ்வகை விரதோத்தியான மாகும். விசேட அபிஷேகம், அர்ச்சனை செய்து காப்பு, தருப்பை என்பவற்றை வெற்றிலை பாக்கு உடனாக அரிசி காய்கறி தட்சணை சேர்த்து அர்ச்ச கரிடத்து வாழ்த்துதலைப் பெறவேண்டும். விரத அநுட்டானத்தில் ஈடுபட்டோர் தத்தம் பொருள் வசதிக்கேற்ப விரதோத்தியானத் தைப் பெரிதாகவோ சிறிதாகவோ கொள்ள முடியும்.

கந்தப்பெருமான் அசுரரை அழித்து அமரரைக் காத்த போரின் நினைவாகவே கந்தசஷ்டி விரதம் அமைகிறது. ஐப்பசி வளர்பிறைக் காலத்திய ஆரம்ப ஆறு தினங்கள் அதற்கென்றமைந்தவை. இந்த விரத அநுட்டானம் கைக்கொள்ள விரும்பு வோர் ஐப்பசி அமாவாசையன்று காலைக் கடன்களை நிறைவு செய்து சைவ அநுட் டான விதிப்படி வேண்டியன இயற்றி ஆலய வழிபாடு செய்து வீடு, வீட்டுச் சுற்றுப்புறத் தூய்மை பேணி மதியஉணவு கொள்ளவேண்டும். விரத அநுட்டானத் திற்கு ஒருவன் தன்னை ஆயத்தம் செய்யும் வகையில் இத்தினத்தைப் பயன் கொள்ளலாம். அடுத்த நாள் பிரதமைத் திதியன்று வைகறையிலே துயிலுணர்ந்து நித்திய கருமவிதிகளை முறைப்படி கவனித்துத் தன்னைப் புனிதனாக்கிக் கொண்டு முருகன் ஆலயம் சென்று அங்கு நடைபெறும் கூட்டுவழிபாடு, முருகநாம பஜனை, புராணப் படிப்புக் கேட்டல், புராணம் வாசித்தல் முதலான வழிபாட்டு முயற்சியில் ஆறுநாட்களும் ஈடுபடலாம்.

ஆறுநாட்களும் உபவாசமிருத்த லாகிய விரத அநுட்டானம் உயர்வானது. ஆறு நாட்களும் உபவாசமாக ஆலயத் திலிருந்து விரதம் அநுட்டிக்க விரும்பு வோர் காப்புக் கட்டித் தருப்பை அணிந்து சங்கற்பித்துத் தொடரலாம். நீரும் அருந் தக்கூடாது. ஆலயத்தில் விரதமநுட்டிப் போருக்கு எனப் பானகம் என்றொரு நீரா காரம் கொடுப்பார்கள் அதனை உண்ண லாம் உண்ணவுந்தான் வேண்டும். கார ணம் பட்டினி போடப்பட்டுள்ள வயிற்றில் வெளியாகும் அதிக சக்தி மிக்கவெப்பம், வாய்வு, பித்தம் முதலானவற்றின் தாக்

**பிறர் உனக்கு உதவியதை மறக்காதே.**

கத்தைச் சமப்படுத்தி உடம்பின் சமநிலையைப் பேணுவதாம். செவ்விளநீர், தேசிக் காய்ப்புளி, சருக்கரை முதலான கொண்டு இந்தப் பானகம் தயாரிக்கப்படும். இந்த வகை தொடரும் போது ஆறாவது நாள் சூரசம்ஹாரம் நிறைவாகியதும் இரவு துயில் கொள்ளாதிருப்பது நல்லது. இரவு முழுவதும் சிவசிந்தனையுடன் பொழுது போக வேண்டும். கந்தப்பெருமான் கதைகளைக் கேட்டல், வாசித்தல், திருமுறைகளைப் பாராயணஞ் செய்தல் முதலியன பயன்பாடுடையது. ஏழாவது நாள் அதிகாலை செய்யவேண்டியன செய்து தூயராகி ஆலயஞ் சென்று பாரணைப் பூசை கண்டு வீடுவந்து சிவனடியார்களை அமுது செய்வித்து உறவினருடன் தாமும் உண்ணலாம்.

ஒருநேர உணவுடன் நிறுத்திக் கொண்டு எட்டாவது தினத்திலிருந்து வழமைக்குத் திருப்பலாம். உபவாசம் இருக்க இயலாதவர்கள் முதல் ஐந்து தினங்களும் இரவிற் பால், பழம் உண்ணலாம். அல்லது பலகாரம் உண்ணலாம். ஆறாவது நாள் மட்டும் உபவாசம் இருந்து பூரணப்படுத்தலாம். அதுவும் முடியாதவர்கள் முதல் ஐந்து தினங்களும் நண்பகல் உணவை உண்டு. ஆறாவது நாள் உபவாசமிருந்து நிறைவுகாணலாம். அவரவர் உடல் நலத்திற்குப் பொருந்தும் வகை விரதம் இப்படி அமையவேண்டும். என்று தீமானிக்கும் பொறுப்பு அவரவரையே சாரும். ஆலயங்களிற் பூசை தரிசித்து விரதம் அநுட்டிக்கும் முறை இது.

இன்னொரு வகை தாமே வீடுகளிற் பூசைசெய்வது முதலில் விக்கினங்கள் ஏற்படாவகை வேண்டி விநாயகனை வழிபட்டபின் விரத நாயகராகிய கந்தப் பெருமானை விம்பத்தில் வணங்கிக் கும்பத்தில் எழுந்தருளுமாறு வேண்டி நடுவே ஒரு நாயக கும்பமும் சூழ எட்டுக் கும்பங்களும் வைத்து ஆவாகணம் செய்ய வேண்டும்.

ஆவாகணம் எல்லாம் வல்ல இறைவனை அன்பினாற் பணிந்து தமக்கு எதிர்முகமாகக் கும்பத்தில் எழுந்திருந்து அருளுமாறு வேண்டுதல். நிவேதனம் தீபதூப ஆராதனை திருமுறைப் பாராயணம், கந்தபுராணம் படித்தல் என்பன செய்யலாம். ஆலயஞ் சென்று தரிசித்தும் வரலாம். உணவு கொள்வது அவரவர் உடல் நலத்தைப் பொறுத்தது. இரவு வெறுந்தரையைத் தூய்மை செய்து துயில் கொள்ளலாம். குறிப்பிட்ட ஒழுங்கிற்கமைவாக இந்த விரதத்தை அநுட்டிப்போர் ஞான சொரூபராய் முருகன் திருவடி நீழலில் உயர்வாழ்வு பெறுவர்.

**பக்தியால் விளையும் நன்மைகள்**

பூஜை, ஜபம் ஆகியவை வீட்டில் நடப்பதால் வீட்டின் சூழ்நிலையே மேன்மை அடைகிறது. அவர்களை ஒட்டியுள்ள குடும்பத்தார் அனைவரும் அந்த நற்பலனைப் பெறுகின்றார்கள். இதில் மனம் ஊன்றி ஈடுபட்டால் அறிவும், கூர்மையும், சிந்தனை ஆழமும் கிடைக்கின்றது. இதனால் குழந்தைகள் படிக்க கட்டாயமாக உட்கார்வது போல நாமும் நேரத்தை ஒதுக்கி கட்டாயமாக உட்காரவேண்டும்.

**அடுத்தவர் சொல்வதை கவனிக்கப் பழகுங்கள்.**

உ

# தெய்வச் சேக்கிழார் பெருமான்

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

சேவற்கொடியோன் செவ்வேள் முருகனுக்குப் பிடித்த குன்றத்தூர் எனும் ஊரில் சேக்கிழார் பரம்பரையில் கல்வியிலும், ஆற்றலிலும் சிறந்து விளங்கியவர் அருண்மொழித்தேவர். இவரது புகழ் பரவியது சோழமன்னன் காதுவரை அது எட்டியது. மன்னன் அநபாயசோழன் நியமம், நேர்மை, தெய்வபக்தி நிறைந்தவர். அரசமரியாதையுடன் சேக்கிழாரை அழைத்தான் தலைமை அமைச்சராக்கினார். தாம் பிறந்த ஊரில் திருநாகேச்சுரம்" எனும் திருக்கோயிலைக்கட்டி ஆறுகாலப் பூஜைக்குரிய ஏற்பாடுகளைச் செய்தார் அருண்மொழித்தேவர்.

அக்காலத்தில் சமணசமய நூலாகிய சீவகசிந்தாமணி எனும் நூலில் அரசகருமங்களை மறந்து, இதைவிடச் சிறந்தது ஒன்றுமில்லை என்று அறியாமையால் மன்னன் திளைத்திருந்தான். இது கண்டு சேக்கிழார் மனம் வருந்தி "இம்மைக்கும், மறுமைக்கும் பலன் தரக்கூடிய சிவகதை இருக்க, அவகதையில் தங்கள் மனம் போகலாமா" என்றுகூறினார். அவரது சொல் மன்னனைச் சிந்திக்கச் செய்தது. சேக்கிழார் முழுமையான ஞானம் பெற்றவர் எனக்கருதி இறைவன் அருள்பெற்ற திருத்தொண்டர்களின் வரலாற்றைக் கூறும்படி கேட்டான். இத்தொண்டு தங்களால் தவிர யாராலும் செய்ய ஏலாது இதை நூலாக்கினால் தமிழகம் சிறக்கும் என்றான்.

சேக்கிழார் பெருமானுக்கு ஆண்டவன் திருவருளாலேயே தெய்வப்புலமை விளங்கலாயிற்று. இந்த அரிய செயலைத் தில்லைக்கூத்தன் அருளின்றிச் செய்ய இயலாதென அன்றே சிதம்பரத்துக்குச் சென்று விண்ணையும், மண்ணையும் வணங்கினார். சிவகங்கையில் நீராடி, நெற்றியில் திருநீறுபூசி, ஐந்தெழுத்தை நெஞ்சிற் பதித்து நடராஜப் பெருமான் சந்நிதியில் அழுதார், தொழுதார் அடியார்கள் வரலாற்றைக் கூறும் அருளைத்தர வேண்டினார். மக்கள், தில்லைவாழ் அந்தணர்கள், மடாதிபதிகள் அத்தனை பேரும் ஆனந்தவெள்ளத்தில் திளைக்க, தொண்டர் தம்பெருமைசொல்ல அண்டர் நாயகன், எந்நாட்டவர்க்கும் அருள்செய்யும் தென்னாடுடைய சிவன், நீலமிடற்றுடை நெற்றிக்கண்ணன், தில்லை அம்பலக் கூத்தன் உலகெலாம் உவப்பெய்திட "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்தார்.

அடியார் கதை எனும் அருளமுதப்பெருங்கடலை ஆயிரங்கால் மண்டபத்தில் அமர்ந்து "உலகெலாம்" என ஆண்டவன் அருளியபடி பாடத்தொடங்கினார். வேதநெறிதழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க, நாதவடிவாகி அந் நாதனே தெய்வப்புலவர் நாவதனில் வல்ல தமிழை வாரி இறைக்கத் திருத்தொண்டர் புராணம் எனும் தேனாறு பாய்கிறது. "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" என முதற்பாடலைப் பாடினார். உயிர்கள் எல்லாவற்றாலும் உணர்தற்கும் ஓதுதற்

எந்தச் சந்தர்ப்பத்திலும் உத்தமனாகவே இரு.

கும் அரியவன். நிலவையும் கங்கையையும் தலையிலே சூடியவன், அளவில்லாத ஒளியுரு உடையவன், திருத்தில்லையில் திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தத் திருக்கூத்து ஆடுகின்றவன். ஆன்மாக்கள் முத்தி நிலையடைவதற்காக ஐந்தொழில்களைப் புரிகின்றான். இவ்வைந் தொழில்களைக் குறிப்பதுவே இறைவனது ஆடல் தோற்றம். ஆன்மாக்களால் உணர முடியாதவன் ஆயினும் அவ்விறைவன் தன் பெருங்கருணையினால் இரங்கிவந்து தன் ஆடல் நிகழ்ச்சியால், ஆன்மாக்களின் ஆணவம் போக்கி, முத்திதந்து ஆட்கொள்வான். மலர்ந்த சிலம்பினைக் கொண்ட அவன் திருவடிகளை மனம் வாக்கு காயத்தால் ஒன்றிவழிபட முத்திநிலை கிட்டும். இறைவன் திருவடி வணக்கமே அவனை அடையும் பாதையாகும். அடியார் தம் உள்ளக் கமலத்தை மலர்விக்கும் திருவடி. அம்பலத்தாடும் ஆடலரசனின் மலரடியை வாழ்த்தி, சிலம்படியை வணங்கி முத்திபெறுவோமாக. அப் பேரின்பப்பேறு நமக்குக் கிட்டும் எனப்படுகிறது முதல்பாடல்.

கண்ணுதற் கடவுளான சிவனை மனம், மொழி, மெய்களால் எண்ணியும், வணங்கித்துதித்தும் தொண்டு செய்வோர் திருத்தொண்டர்கள் எனப் போற்றப்படுகின்றனர். தொண்டின் பெருமையே இறை தொண்டு, மக்கள் தொண்டின் பெருமையைச் சொல்வதே இப்புராணம். அடியார்கள் அன்னமிடுதல் என்ற அறத்தை வாழ்க்கையின் மிகப்பெரிய குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தார்கள். அந்த அறத்தைச் செய்வதற்கு முட்டுக்கட்டை ஏற்படுமாயின் உயிரை விடுவார்களே ஒழிய அறத்தை விடமாட்டார்கள். 63நாயன்மார் வரலாற்றையும் மிகவிரிவாகப் பக்திச் சுவை நனி சொட்டச்சொட்டப் பாடியவர் சேக்கிழார் சுவாமிகள். சுந்தரமூர்த்தி நாயனார் அறுபத்து மூவரோடு ஒன்பதின்மர் தொகையடியார்களையும் திருத்தொண்டத் தொகை எனும் பதிகத்துள் பாடியுள்ளார். இப்பதிகத்தை முதலாகக்கொண்டு நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி எனும் நூலில் இவர்கள் வரலாற்றை விளக்குகிறார். இவ்விரண்டையும் துணையாகக் கொண்டு சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணமெனும் பெரிய புராணத்தைப் பாடியருளினார்.

இத் திருத்தொண்டர்கள் சிவபெருமானிடமும், சிவனடியாரிடமும் நிறைந்த அன்பு பூண்டவர்கள். தாம் பூசும் திருநீற்றைப் போலவே கள்ளங்கபடமற்ற வெண்மையான பரிசுத்த உள்ளம் கொண்டவர்கள். எப்போதும் கலங்கா மனமுடையவர்கள். நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும், துயின்றாலும் இறைவனை மறவாதவர்கள். அரனையும், அடியாரையும் பணிந்துருகி வாய் தழுதழுப்பக் கண்ணீர் வெள்ளம் பாய, மயிர் சிலிர்ப்பக் கூசியே உடல் கம்பித்திடும் பக்த சிகாமணிகள் தமக்கென விரும்பி மோட்சத்தையும் வேண்டிக் கேட்காத தம் முனைப்பற்ற வீரர்கள். இவர்களுடைய திருவுருவங்கள் கோயில்களிலே வைத்து வழிபடுவதன் நோக்கம், இவர்களுடைய வாழ்க்கையை நினைவிற்கொண்டு, இவர்களைப்போல வாழவேண்டுமென்பதற்காகவே.

சேக்கிழார் பெருமானுக்குத் தெய்வப்புலமை ஆண்டவன் திருவருளால் விளங்கலாயிற்று. சேக்கிழார் அயரா அன்பில் அரன்கழல் போற்றி மெய்யுணர்வு

பெற்றவர். சிவமே பார்த்துப் பார்த்து தெளிவுபெற்ற சித்தர். சிதாகாசத் தொடர்புடையவர். அவருடைய சிவபக்தியும், சிவனடியார் பக்தியும் பெரியபுராணத்தைப் பாடவேண்டும் என்ற வேட்கையை உந்தின. பொற்பொதுவில் நடம்புரியும் ஐயன் "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்தவுடன் சேக்கிழாருக்கும், திருவருளுக்கும் பழமைத் தொடர்பு ஏற்பட்டுத் தெய்வத் திருவருட் சேக்கிழாராக்கியது. பெரியபுராணம் நாயன்மார் வரலாற்றைக் கூறும் அருள்நூல் ஆசிரியரின் பரந்த நோக்கும், விரிந்த மனமும், கடவுளிடத்தன்பும், உயிர்களிடத்தன்பும், சொல்நயமும், பொருளாழமும், கல்லையும் கரைக்கும் பாடல் வளமும் நூல்முழுவதும் பொலிந்து கொண்டிருக்கின்றன. புற இருளைச் சூரியன் நீக்குவது போல அக இருளைத் திருத்தொண்டர்புராணம் நீக்கும். மக்களுக்கு வேண்டிய கருத்துக்களைக் காப்பியத்தின் மூலம் சொல்லிய பெருமை சேக்கிழாருக்கேயுண்டு.

"உலகெலாம்" எனத் தொடங்கி "உலகெலாம்" என நிறைவடையும் பெரியபுராணம். செந்தமிழ்ப்பெரும்புலவரும், சிறந்த சைவஞானியும், பெரும்பக்திமானுமாகிய சேக்கிழார் பெருமான் தமிழர் தம் வாழ்வியலையும், நெறிநின்ற அடியார்களின் வாழ்க்கைச் சிறப்பையும் திருவருட் காப்பியமாகப் படைத்துள்ளார். ஓரறிவிலிருந்து ஆறறிவுள்ள சகல ஜீவராசிகளிலும் அணுவுக்குள் அணுவாக வீற்றிருக்கும் இறைவனையும் அவன் பெருமைகளையும் போற்றுகின்ற இந்நூலில் ஜீவகாருண்யத்துடன் சமத்துவமும், சகோதரத்துவமும் வலியுறுத்தப்படுகின்றன. சிவனடியார்கள் எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும், மன்னியசீர் சங்கரன் தாள் மறவாமல் இருப்பின் அவர்கள் எல்லோரும் இறைவனுக்கு வேண்டியவர்கள் என்பதைக்காட்டுகின்ற ஒப்பற்றநூல், மகளிரைத் தம் புராணத்தில் போற்றிப் பெண்மைக்கு மதிப்பளித்துள்ளார். சிவனடியார் சீருரைத்துச் செழுந்தமிழைத் தெய்வநிலைக்கு உயர்த்தியவர் தெய்வச் சேக்கிழார் சுவாமிகள்.

பெரியபுராணம் ஓர் அன்புக்கடல், பக்தியை உயிராகக் கொண்டகாவியம். சரித்திரத்தை வித்தாகக் கொண்டெழுந்த காவியம். பெரியபுராணம் எல்லா உலகுக்கும் உரியது. அன்பேசிவம் என்பதை ஆதாரமாகக் கொண்டவர்களின் அருள் வரலாற்றையும், பண்பையும் நாம் கடைப்பிடிக்கவேண்டும். பெரியபுராணத்தில் செய்யத் தகுந்தவை, செய்யத் தகாதவை பற்றி எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன. குற்றம் இல்லாத மனம் உடைய மெய்யடியார் சொல்லும் தூய சொல்லுக்குச் சக்தி அதிகம். மந்திரச் சொல்லான ஐந்தெழுத்தை உச்சரித்துப் புண்ணியம் பெற்றவர்களை வரலாற்றிலே குறிப்பிடுகிறார். பெரியபுராணத்தில் பிள்ளைபாதி புராணம் பாதி என்று வழங்கப்படும் அளவில் திருஞானசம்பந்தர் வரலாறு பேசப்படுகிறது. பலநூறு திருத்தலங்கள் சென்று இறைவனைப் பாடித்துதித்துப் பல ஆயிரம் பதிகங்கள் மொழிகிறார். ஞானசம்பந்தர் தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும், சைவத்திற்கும், சிவவழிபாட்டிற்கும் செய்த பேருபகாரத்தைக் கருதி இப் புராணத்தில் அவருக்கு சிறப்பான இடத்தைச் சேக்கிழார் ஒதுக்கிவிட்டார். மிகப்பெரிய

**சேவை செய்பவனிடம் வேற்றுமை கிடையாது.**

புரட்சியாளர் சம்பந்தர். திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்ற அரிசனரைத் தம் முடனே யாழ்வாசிக்க வைத்திருந்து, அவரையும், அவரது மனைவியையும் எல்லாக் கோயிலுக்கும் கொண்டு சென் றிருக்கிறார். மூடநம்பிக்கை சகுனம் பார்த் தல், இராகு காலம் எல்லாவற்றையும் சம்பந்தர் காட்டியிருக்கிறார். சுந்தரர் தமது திருமணத்தின் மூலம் சமுதாயப் புரட்சி செய்திருக்கிறார். இவற்றைச் சொல்லும் பெருமை சேக்கிழார் பெற்றார். தெய்வச் சேக்கிழார் சிவன் பெருமையை, அச்சிவ பிரான் அடியார்க்கெளியனாக எழுந்தரு ளிய அருமையில் எளிய பெருமையை விளக்குவதாலும், இதற்கு முன்னும், பின்னும் இதனையொத்த பெருமையுடைய நூல் தோன்றாமையாலும் "பெரியபுராணம்" என்று பாராட்டப்படுகிறது.

நூல் அரங்கேற்றம் சிதம்பரத்து ஆயிரங்கால் மண்டபத்தில் சித்திரைத் திங்கள் தொடங்கி அடுத்த சித்திரைத் திங்களில் நிறைவுபெற்றது. புராணம் பாடி முடிந்ததும் மன்னன் தில்லையம்பதிக்கு நால்வகைச் சேனையுடன் சேக்கிழாரைக் காணப்புறப்பட்டான். எதிர் கொண்டழைத்த பக்தியின் சின்னமாகச் சேக்கிழாரின் தோற்றத்தைக் கண்டமன்னரின் கண்கள் கண்ணீரைப் பெருக்கின. அப்போது நட ராஜப் பெருமான் " நம்முடைய தொண்டர் களின் கீர்த்தியைப் புகழ்ந்துபாட, நாம் ''உலகெலாம்'' என அடியெடுத்துக் கொடுக்கச் சேக்கிழார் பெரியபுராணமாகிய காப்பியத்தைப் பாடிமுடித்து விட்டான். வேல்கொண்டு பகைவரை அடக்கியாளும் மன்னனே! நீ இந்தப் புராணத்தைக் கேட்பாயாக" என்று பொன்னம்பல அசரீரி யாக இறைவன் கட்டளையிட்டார். அவரது பாதச்சிலம்பொலி கேட்டது. மன் னன் அளவிலா ஆனந்தமடைந்தான்.

வேதியர்கள் திருச்சிற்றம்பலத்தில் சந்நிதானத்தைச் சுத்தப்படுத்திப் பீடத்தை அமைத்துப் பச்சைநிறப் பட்டாடைவிரித்து, அதற்குமேல் தூயவெள்ளை நிறத் துணியை மடித்து வைத்து, நறுமலர் களைத்தூவி, அகில், சாம்பிராணி போன்ற வாசனைத்தூபங்களைக் காட்டினார்கள். பன்னிரண்டாம் திருமுறை என வந்த பெரியபுராணக் காப்பியத்தை வைத் தார்கள். மன்னரும் மற்றோரும் சூழ்ந்திருக் கச் சேக்கிழார் காப்பியத்தைப் பாட ஆரம் பித்தார். அம்பலவாணருடைய அடியார் கள் அதைக்கேட்டு மெய்சிலிர்த்துப் போனார்கள். சேக்கிழார் பெருமானுக்குத் "தொண்டர்சீர் பரவுவார்" என்ற திருநாமத் தைச் சூட்டினார்கள். இக்காவியத்திற்கு ஒரு சிறப்புண்டு. இராமாயணம், மகா பாரதம் எல்லாம் வடமொழியிலிருந்து தமிழாக்கம் பெற்றவை. ஆனால், பெரிய புராணமோ முற்றிலும் மூலகாவியமாகும். நிறைவு நாளில் அரசன் இவரையும், இவரது நூலையும் யானையில் ஊர்வல மாகத் தானே சாமரை வீசி அழைத்து வந்து பல விருதுகள் வழங்கிச் சிறப்பித் தான். பின்பு சேக்கிழார் தில்லைத் திருத் தலத்தில் இருந்து வைகாசிப்பூச நாளில் சிவனடி அடைந்தார். பேரின்ப நெறி யுணர்த்தும் பெருங்கதையை ஓதியுணர்ந் தால் உய்ந்திடலாம். தமிழ் உள்ளளவும், சைவம் உள்ளளவும் சேக்கிழார் சுவாமி கள் பெருமை சிறந்து விளங்கும்.

**எளிமையைப் பின்தொடர்ந்து மகிழ்ச்சி வருகின்றது.**

உ

# காளாத்திக் கடவுளுக்கு காவல்பூண்ட கண்ணப்பநாயனார்

**திரு சிவ. சண்முகவடிவேல் அவர்கள்**

சகத்திலுள்ளோர் எல்லோரும் தமக்கு ஒரு ஆபத்துவரும் வேளையில் இறைவனுடைய சரணகமலாலயத்தில் சரண் அடைவார்கள். அது உயிரினால் விலக்குவதற்கு அரிய இயல்பான இயல்பு.

இயமனைக் கண்டதும் மார்க்கண்டர் என்பவர் அந்தகன் வந்தனன் வந்தனனாம் என்று எந்தையார் சேவடி இறைஞ்சி ஏத்தியது உலகம் அறிந்த உண்மை.

இறைவனுடைய இணையடிகளை மானுடர் புனையாக அருந்துணையாகக் கோடல் என்றும் புதுமை அன்று.

திருநாவுக்கரசு நாயனார் திருத்தாண்டகத்தில் இறைவனுடைய அருந் துணைமையை அமைத்து அழகாகப் பாடுவார்.

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல்ஞாலத் தகத்துள் தோன்றி
வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்கள் அகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

திருக்காளத்தி மலையில் கண்ணுதலாரைக் கண்ட கண்ணப்ப நாயனார் கடவுளுக்குத் துணை ஒருவர் இல்லையே என்று கலங்கா நின்றார். தாமே பெருந்துணையாகப் பெரும் பற்றப் புலியூரருக்குக் காவல் பூண்டார்.

"கொடிய மறக் குலத்தில் வந்த வேட்டுவச் சாதியாரைப் போல யானை, கரடி, புலி, சிங்கம் முதலிய கொடிய விலங்குகள் திரிவதற்கு இடமான காட்டில் உம்முடன் துணையாக உள்ளவர்கள் ஒருவர் இல்லாமல் வருந்துகின்றேன். நீர் இம்மலையில் தனியாக இருக்க நான் எப்படி அகன்று செல்வேன்" என்று ஏங்கி இரங்குவார். மனம் நொந்து நைகின்றார். காளத்தி ஈசனை விட்டுப்பிரிய மனமில்லாமல் கன்றை விட்டுப் பிரிந்த தாய்ப்பசுபோலக் கண்ணீர் சொரிவார். இத்தன்மை இறைவனிடத்தில் வைத்த தந்தை அன்பு.

இறைவன் பசித்திருப்பதையும் பார்த்துக்கொண்டு நிற்கவும் கில்லார். காளத்திக் கடவுளுடைய பசியினைப் பார்த்துப் பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிவு கொள்வார். இது இறைவனிடத்திற் கொண்ட தாயன்பு.

மதுவும் மாதுவும் தீமையின் அடிப்படை.

தந்தை அன்பும் தாயன்பும் இணைந்த ஒரு தலையாய அன்பினால் திண்ணனார் இருதலைக் கொள்ளி எறும்பு என ஆனார். இறைவனுடைய பசியைப் பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது. விட்டுப்போவதற்கும் ஒரு துணையுமில்லை. ஓர் அன்பின் இரு முனைகள் திண்ணனாரை வருத்திய தண்ணளி.

ஆர்தம ராக நீரிங் கிருப்பதென் றகல மாட்டேன்.
நீர்பசித் திருக்க இங்கு நிற்கவும் கில்லேன் என்று
சோர்தரு கண்ணீர் வாரப் போய்வரத் துணிந்தா ராகி
வார்சிலை எடுத்துக் கொண்டு மலர்க்கையால் தொழுது போந்தார்.

என்பது பெரியபுராணம். இது பகற்காலத்தில். இராக்காலத்தில் சுவாமிக்குத் துணையாக உறங்காது காவல் கொள்வார். ஐயரை அகலாது அருகில் நிற்பார்.

அவ்வழி அந்தி மாலை அணைதலும் இரவு சேரும்
வெவ்விலங் குளஎன் றஞ்சி மெய்ம்மையின் வேறு கொள்ளாச்
செவ்விய அன்பு தாங்கித் திருக்கையிற் சிலையும் தாங்கி
மைவரை என்ன ஐயர் மருங்குநின் றகலா நின்றார்.

என்று கண்ணப்பநாயனாருடைய அன்புத் திண்மையை எடுத்து ஏத்தும் பெரியபுராணம்.

இந்த வியத்தகும் அன்பின் விசித்திரத்தை உணர்ந்து அல்லவோ அன்பிற்குக் கண்ணப்பனாரை அடையாளம் காட்டுவார் அடிகளார்.

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணிந்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ. (218)

## "கந்தன் திருவிழா"

"ஆற்றங் கரை வேலனுக்குத் திருவிழா
பக்திப் பரவசமாய் நடக்கிறது பெருவிழா
வண்ண மயிலேறி முருகன் திருஉலா
வள்ளி தெய்வயானை மருங்கிருத்தி வரும்உலா
வெள்ளிவேல் கையில் ஏந்தி வீதிஉலா
எங்கள் வினையகற்றி அருள்புரியும் பெருவிழா
வண்ணக் காவடிகள் சூழ்ந்து வரத் திருவிழா
நாட்டில் நலங்கள் சொரிந்திடவே பெருவிழா
அடியவர் அரோகரா கோஷமெழுப்பும் திருவிழா
சந்நிதியான் நம்மைக் காத்தருளும் பெருவிழா"

*-நயினை விஜயன்-*

**பிறருக்கு இன்பம் உண்டாகும்படி பேசு.**

உ



# தவத்திரு ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகள்

திரு R.V. கந்தசாமி J.P அவர்கள்

யாழ்ப்பாணத்து ஞான பரம்பரையில் வந்த மகான்களுக்குள் தவத்திரு ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளும் ஒருவராவர். கொக்குவில் பதி தந்த அருந்தவசீலரான இவர், கொக்குவில் தலையாளியில் வாழ்ந்த புத்தூர் மழவராயர் பரம்பரையில் வந்த ஆயுர்வேத வைத்தியர் திரு செல்லத்துரைக்கும், மடந்தநாதமுதலியார் பரம்பரையில் வந்த சிவபாக்கியம் அம்மையாருக்கும் இல்லற வாழ்வின் நற்பயனாக இரண்டாவது புத்திரனாக 27-08-1944இல், அனுஷ நட்சத்திரத்தில் தோன்றியவர். இவருக்கு உடன்பிறந்த சகோதரர்கள் இருவரும், சகோதரிகள் இருவரும் உளர்.

சுவாமிகள் தமது ஆரம்பக்கல்வியை சாவகச்சேரி நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியைச் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி ஆகியவற்றிலும் பயின்றவர். "விளையும் பயிரை முளையில் தெரியும்" என்பதற்கிணங்கச் சிறுவயதினிலே சமயப்பற்றும், கடவுள் வழிபாடும் மிக்கவராக இவர் திகழ்ந்தார். விளையாடும்போது சிறுசிறு விக்கிரகங்களை அலங்கரித்து, அழகு பார்த்துத் தாம் மகிழ்வுடன், பெரியோர்களுக்கும் அவற்றைக் காண்பித்து மகிழ்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தார். அத்துடன் காரைநகர், தாவடி, கொக்குவில், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள ஆலயங்களில் சாத்துப்படி செய்து நன் மதிப்பைப் பெற்றவராகவும் இளமைக் காலத்தில் விளங்கினார். அவரது இறுதிக் காலங்களில் யாழ்ப்பாணம் வில்லூன்றிப் பிள்ளையார், கொக்குவில் அதிபதீஸ்வரர் ஆலயங்களின் மகோற்சவ நாட்களிலும், விசேட உற்சவ நாட்களிலும் அற்புதமான முறையில் சாத்துப்படி அமைத்துக் கொடுத்து மகிழ்வடைந்ததுடன், அவற்றின் புகைப்படங்களை வேதாந்த மடத்துக்கு வருவோருக்கும் காண்பித்து "தான் பெற்ற இன்பம்பெறுக இவ்வையகம்" என்ற பெரு நோக்குடன் செயற்படுவதில் அவருக்குத் தனியானதோர் மகிழ்ச்சி இருந்ததை அவருடன் பழகியோர் அனைவரும் அறிவர். கோண்டாவில் அதிபதீஸ்வர ஆலயத்தில் விசேட நாட்களில் பூசகராகவும் சுவாமிகள் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

இவர் மட்டுவில், சாவகச்சேரியைச் சேர்ந்த சிவஸ்ரீ பொன்னுச்சாமிக்குருக்களிடம் சமயதீட்சை பெற்றுக்கொண்டார். தந்தையாரின் வைத்தியத் தொழிலின் நிமித்தம் சாவகச்சேரியில் சுவாமிகளும் பல ஆண்டுகள் வசிக்க வேண்டி இருந்தது. இவரது தந்தையார் ஆன்மீக நாட்டம் மிகுந்தவர். ஸ்ரீமத் மகாதேவா சுவாமிகளின் சீடர்களில் ஒருவராக விளங்கியவர். ஏழாம் வயதினிலிருந்தே இவரும் தந்தையாருடன்

பிறருடைய தவறுகளை மறப்பதே நன்று.

யாழ்ப்பாணம், கந்தர்மடம் குமாரசாமி வீதியிலுள்ள வேதாந்தமடம் சென்று வருவது வழக்கமாக இருந்தது. இதன் பிரகாரம் இவர், வேதாந்தமடம் சென்று அங்கு சிவகுருநாத குருபீடத்திற்குக் குருமூர்த்திகளாய்த் திகழ்ந்த தவத்திரு இராமலிங்க சுவாமிகள், தவத்திரு வடிவேல் சுவாமிகள், தவத்திரு நமசிவாயம் சுவாமிகள் முதலானோரிடம் வேதாந்த, சித்தாந்த நூல்களையும், இலக்கண, இலக்கிய நூல்களையும், மற்றும் நீதி நூல்கள், திருமுறைகள் போன்றவற்றையும் முறையாகப் பயின்று, தமது அறிவை ஆழமாகவும் அகலமாகவும் ஆக்கிக் கொண்டதோடு, ஆன்மீக நாட்டமுடையவராகத் தம்மைப் பக்குவப்படுத்திக்கொண்டார்.

சுவாமிகள் அகத்திய முனிவர் போன்று சிறிய தோற்றமுடையவர். ஆனால் உயர்ந்த உள்ளமும், புன்முறுவல் பூத்தமுகமும், பிழைகளை நேருக்கு நேர் வெளிப்படுத்தும் சுபாவமும் கொண்டவர். சிவந்த மேனியர் கருகருவென்றிருக்கும் அழகிய தாடி அவரின் அழகுக்கு அழகு செய்தது. பழகுவதற்கினிய நற்பண்பாளர். தான் எடுத்த பணியை எந்தச் சூழ்நிலையிலும் நிறைவேற்றிக் கொள்ளும் தீவிரமான உழைப்பாளி. இறுதி இலக்கை எய்தும் வரை தொடர்ந்து முயற்சி செய்து வெற்றி காண்பது. இவரது அயராத முயற்சியின் பயனாகப் பெரியதொரு தியான மண்டபம் அமைத்துப் பூர்த்தியாகித் திறந்து வைக்கப்படும் நிலையில், சுவாமிகள் பூரணத்துவம் அடைந்துவிட்டமை கவலை தருவதாகும்.

1964 ஆம் ஆண்டு அதாவது சுவாமிகளின் இருபதாவது வயதில் ஞான தீட்சை பெற்று ஞானகுருவாக்கப்பட்டார். அதன் பின்னர் 1981ஆம் ஆண்டு சுவாமிகள் வேதாந்தமடம் சிவகுருநாத குருபீடத்தின் 7ஆவது பீடாதிபதியாகக் குருபீடம் ஏற்றார்.

"யாவர்க்குமாம் இறைவர்க் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற் கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே"

தவமொழி தந்த திருமூலரின் இவ்வறிவுரைக்கேற்பச் சுவாமிகள் தமது அறப்பணியை மேற்கொண்டார். சுவாமிகள் முறையாக மடத்திலே பூசைகள் நடத்தி வைப்பதுடன், அங்கு வருபவர்கட்கு அன்பு கலந்த புன்சிரிப்புடன் அன்னம் அளிப்பது நாடறிந்த நாளாந்த நிகழ்ச்சியாகும். அவர் நல்லினப் பசுக்களை அன்புடன் அரவணைத்து வளர்த்தார். அயலவர்களுக்கும் சுத்தமான பசும்பாலைக் கொடுத்து உதவினார். அவருடைய இறுதிச்சடங்குகளில் அவரது தேகத்துக்கு அபிஷேகம் நடைபெற்றபோது இரு பசுக்கள் "அம்மா" என்று கதறியழுதமை அங்கு வந்திருந்தோரது நெஞ்சங்களை நெகிழச்செய்தது.

1924ஆம் ஆண்டு ஆவணி மாதம் நான்காவது பீடாதிபதியாகக் குருபீடம் ஏறியருளிய தவத்திரு மகாதேவா சுவாமிகள், அவ்விடம் வரும் சீடர்களை அன்னை, தந்தை, குரு, தெய்வம் என அரவணைத்து ஆன்மீக நெறியில் தலைசிறந்தவர்களாக உருவாக்கினார்.

**ஏதாவது ஒன்றைப்பற்றி நிற்பதே உயிரின் இயல்பாகும்.**

வேதாந்த மடமானது, வேதாந்த- சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகர்கள் ஒன்று கூடும் இடமாக விளங்கியது யாழ்ப்பாணத்து மண் சித்தர்களாலும், ஞானியர்களாலும் பண்படுத்தப்பட்ட புண் ணியத்துக்குரியது. கடையிற்சுவாமிகள் வழிவந்த சாஜன்சுவாமிகள், கனகரத் தினம்சுவாமிகள், மகாதேவாசுவாமிகள், இராமலிங்கசுவாமிகள், நமசிவாயம் சுவாமி கள் என்னும் துறவிகள் குருசீடமரபில், ஆன்மவிசாரம் செய்த குருபீடத்தின் ஏழா வது பீடாதிபதியான தவத்திரு சோமாஸ் கந்தவேள் சுவாமிகளின் அர்ப்பணிப் புடனான பணி என்றும் நிலைபேறானது. அவராற் பரிபாலிக்கப்பட்ட வேதாந்த மடத் தில் தன்முனைப்பற்றவர்களாக, குரு வருளே திருவருளாமென மெய்யுணர்ந்த வர்களாக அடியவர்கள் கூடியிருந்தனர். ஆன்மீகத் தேடல்கள் நடைபெற்றன. மாதந்தோறும் ஆன்மீகச் சொற்பொழிவுகள் இடம்பெற்றன. நூல் வெளியீடுகளும், அவை பற்றிய விமர்சனங்களும் இடம் பெற்றன. கற்றவர்களும் மற்றவர்களும் கலந்துறவாடி ஆன்மபோதம் பெறுகின்ற புண்ணியத்தலமாக வேதாந்த மடத்தைச் சுவாமிகள் பரிமளிக்கச் செய்தார். விளம்பர மில்லாத பணி அவருடையது. தமக்குப் பின் யார்? என்ற வினாவுக்கு விடை காண வேண்டிய தேவையைச் சுவாமிகளின் உள்ளுணர்வு உணர்த்தி நின்றது. வேதாந்தமடம் என்னும் சிவகுருநாதகுரு பீடத்திற்கு உண்மையான வாரிசாகச் சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்ட, அருணாசலம் - இராசலட்சுமி யின் புத்திரனும், தனது சீடர்களில் ஒருவரு மாகிய திரு செந்தூரனை 30.03.2003 இல் ஞானதீட்சை அளித்து, ஸ்ரீவேத வித்தியா சாகரர் என்னும் நாமம் சூட்டி, எட்டாவது பீடாதிபதியாக நியமிக்க வழி செய்தார். அதன்படி குருபீடத்திற்குரிய அசையும் அசையாச் சொத்துக்களனைத்தும் 8 ஆவது பீடாதிபதிக்கு உயில் எழுதப் பட்டது.

ஞானிகளும் யோகிகளும் தமது உடலின் முடிவினை உய்த்துணரும் பான்மையினராதலால், தமக்கு இனிமேல் இங்கு என்ன வேலை? எனத் தம்மையே கேட்டுக்கொண்ட சுவாமிகள், இனிமேல் எனக்கொரு கவலையும் பொறுப்பும் இல்லையென அடிக்கடி கூறி வந்தார். அவரது இவ்வுலகப்பணி நிறைவு கண்ட திருப்தியுடன் விய வருஷம் ஆடித் திங் கள், ஒன்பதாம் நாள் செவ்வாய்க்கிழமை (25.7.2006) பூச நட்சத்திரம் கூடிய சுப வேளையில் எங்கள் சுவாமிகள் பூரணத் துவம் எய்தினார். சுவாமிகளின் இறுதி நிகழ்ச்சிகளில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். இளைஞரான புதிய பீடாதிபதி அவர்கள், தமது குருவின் திரு வுடலுக்கு ஆத்மார்த்தமாகச் சடங்குகளை நிறைவேற்றினார். ஸ்ரீமத் சோமாஸ்கந்த வேள் சுவாமிகளின் வேண்டுதலின்படியே அன்னாரது திருவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் அக்கினியுடன் சங்கம மாகியது.

கடந்த இரு தசாப்த காலங்களுக்கு மேலாக ஸ்ரீமத் சுவாமி களுக்கும் எனக்குமிடையிலான அன்பும், நட்பும் இறுக்கமாயிருந்தது. அடிக்கடி வேதாந்த மடம் சென்று அவரைத் தரிசிப்பதும், அவருடன் அளவளாவுவதும், தர்க்கிப்பதும், அன்னமுண்பதும், ஆன்மீகத்

**கவலையில் உள்ளத்தைச் செலுத்தக்கூடாது.**

தேடல்களிலீடுபடுவதும் எனது வழக்கம். அது யான் செய்த புண்ணியப் பேறென நம்புகின்றேன். அந்த அருந்தவ ஞான மூர்த்தியை வாயார வாழ்த்தி, மனமார வணங்குவதே சாலச் சிறந்தது. அவரது தூய உடல் மறைந்துவிட்டாலும், தவ வுருவம் எம் இதயக் கோவிலில் நிலையாக உறைந்திருக்கும். அவர் விதைத்து விட்டுச் சென்ற ஆன்மீக வித்துக்கள் பயிராகி இந்த மண்ணை என்றென்றைக்கும் வாழ்விக்கும்.

தொடர்ச்சி...

**2006ஆம் ஆண்டு உற்சவம் (23.08.2006) தொடக்கம் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்**

| | | |
|---|---|---|
| சி. நிரோஜா சந்தைவீதி | உடுப்பிட்டி | 1000. 00 |
| பாரதமணி தர்மலிங்கம் | உடுப்பிட்டி | 1000. 00 |
| S. பாலசுப்பிரமணியம் | இருபாலை | 1000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| S. தயாநிதி ஐயனார்வீதி | பருத்தித்துறை | 6000. 00 |
| இ. ஆறுமுகம் | அச்சுவேலி | 1000. 00 |
| செல்வானந்தம் கலைச்செல்வி | உடுப்பிட்டி | 4000. 00 |
| திருமதி வி. விபுலன் பிரப்பங்குளலேன் | வண்ணார்பண்ணை | 1000. 00 |
| ஜெயகணேசா ஸ்ரோர்ஸ் | பருத்தித்துறை | 1மூடை சீனி |
| சி. தங்கவடிவேலு (சிற்றி) | பருத்தித்துறை | 2மூடை மா |
| தி. துவாரகேஸ்வரன் (ஈஸ்வரன் ரேடஸ்) | யாழ்ப்பாணம் | 10,000. 00 |
| ஸ்ரீநதியா நகைமாடம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| வைஷ்ணவி நகைப்பூங்கா | நெல்லியடி | 500. 00 |
| சி. நாகலிங்கம் லிங்கம்ஸ் | கரணவாய் | 1500. 00 |
| T. சண்முகவரதன் அவுஸ்திரேலியா | (தொண்டைமானாறு) | 17,000. 00 |
| V. விஜித்தன் | அவுஸ்திரேலியா | 4000. 00 |
| இ. புஸ்பநாதன் | உரும்பராய் | 1மூடை அரிசி |
| ம. ஸ்ரீக்காந்தன் கொழும்புத்துறை | யாழ்ப்பாணம் | 10,000. 00 |
| க. காசிராசா | அளவெட்டி | 3000. 00 |
| K.S. கணபதிப்பிள்ளை | கைதடி | 1மூடை அரிசி |
| மா. தங்கவேல் போடிங்றோட் | பருத்தித்துறை | 3000. 00 |
| R. சிவலோகலிங்கம் நிலாவெளி | திருமலை | 5000. 00 |
| இரத்தினம் குடும்பம் (மிதுதிலா) | கரவெட்டி | 1000. 00 |
| R. முகுந்தன் | மாலிசந்தி | 500. 00 |
| N. மகேஸ்வரி | நெல்லியடி | 1000. 00 |
| த. கணபதிப்பிள்ளை சாயிஇல்லம் | உடுப்பிட்டி | 2000. 00 |

(தொடரும்...

எப்போதும் பின்வாங்கிச் செல்லலாகாது.

உ

# முன்னோர் சொன்ன கதைகள்

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

இறைவன் எங்குமிருக்கின்றான். தூணிலும் துரும்பிலும் மட்டுமல்ல. நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களிலும் ஊர்வன, பறப்பன, நீர் வாழ்வன, நடப்பன முதலிய அனைத்து ஜீவராசிகளிலும் அவனிருக்கிறான். எனினும் இவ்வாறு இறைவனைக் காண எம்மால் இயல்வதில்லை. அப்படிக் காண முடிந்தால் எம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய பெற்றோரிடத்திற்கூடக் குற்றங்காணும் ஜென்மங்களாய் நாமிருப்போமா? எனினும் ஜீவராசிகளைக் காணும் போது இறைவனை சிந்திக்க வைக்கிறது எமது சமயம்.

காக்கைச் சிறகினிலும் கண்ணனின் கருமையைக் காணும் பக்குவமில்லாவிடினும் சனிக்கிழமை விரதமிருந்து உணவு உண்ணுமுன் ஒரு காகத்துக்கேனும் உணவு கொடுக்கின்றோம். எலியைக் கண்டால் விநாயகரின் எண்ணம் வருகிறது. பெரும்பாலான மிருகங்களும் பறவைகளும் இறைவனது வாகனங்களாகவும் கொடிகளாகவும் ஆபரணங்களாகவும் கருதப்படுவதால் அவற்றைக் கண்டதும் இறைவனது நினைவு வருகிறது. நதியைக் கண்டால் சிவபிரானின் முடி தெரிகிறது. கடலைக் கண்டால் பரந்தாமன் பள்ளிகொள்வது தோன்றுகிறது. மீனைக் கண்டால் அவனது மச்சாவதாரம் நினைவில் தெரிகிறது. ஏன் பன்றியைக் கண்டாற்கூட வராக அவதாரமும் சிவபெருமான் பன்றிக்குட்டிகளுக்குப் பரிந்து தாயாகி வந்து பாலூட்டிய திருவிளையாடலும் மனம் முழுவதும் ஆக்கிரமிக்கின்றன. இப்படிக் கூறிக் கொண்டே போகலாம். இவ்வாறு சிந்திக்க வைக்கும் சமயம் மற்றொன்றையும் போதிக்கிறது.

துன்பப்படும் ஒரு மனிதனுக்கோ வேறு உயிரினங்களுக்கோ நாம் காட்டும் பரிவும் செய்யும் உதவியும் இறைவனுக்குச் செய்வதாகும். சமயம் கூறும் இந்தக் கருத்தை நாம் மனத்திற் பதித்துக்கொண்டால், ஏழைகளுக்கும் நோயாளிகளுக்கும் கஷ்டப்படுவோருக்கும் மனம் விரும்பி உதவ முன்வருவோம். இதனை மனத்திற் பதியவைப்பதற்காகப் பல கதைகளை எமது முன்னோர் கூறியுள்ளனர். அவற்றுள் ஒரு கதையை இங்கு தருகிறேன்.

ஓர் அரசன் தனது அமைச்சர் மேல் மிகுந்த பரிவும் பற்றும் கொண்டவனாயிருந்தார். ஒரு நாள் சிறந்த பட்டு வியாபாரி கொண்டுவந்த பட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்காக அரசர் பரிசீலித்துக்கொண்டிருந்த போது அமைச்சர் அங்கு வந்தார். மிகவிலையுயர்ந்த பட்டுச் சால்வையொன்றை எடுத்து அமைச்சருக்குத் தன் அன்பளிப்பாக அரசர் வழங்கினார்.

இத்தகைய விலையுயர்ந்த பட்டினை அணியும் அருகதை எனக்கில்லை. இதனைப் பரிசளித்துத் தங்கள் பேரன்பைப் புலப்படுத்துகிறீர்கள் எனப் பணிவுடன் கூறி அதனை அமைச்சர் தயக்கத்

நூல்களைப் படிப்பதை நிறுத்தக்கூடாது.

துடன் பெற்றுக்கொண்டார்.

மறுநாள் இரவுநேரம் ஊரைச் சுற்றிப்பார்க்க அரசருடன் அமைச்சர் சென்றார். மிகுந்த குளிராக இருந்ததால் மன்னர் பரிசளித்த சால்வையை மந்திரி போர்த்திருந்தார்.

வழியில் ஒரு கிழவி படுத்திருந் தாள். உடலை முழுமையாக மூடுவதற் குப் போதிய ஆடையின்றி அவள் படுத் திருந்த கோலத்தைக் கண்டு அரசர் முகம் சுழித்தார்.

"கிழவியென்றாலும் ஒருபெண் இப்படி.. சீச்சீ.." என்று தன் வெறுப்பையும் வெளிப்படுத்தினார்.

கிழவி கிடுகிடுவென்று குளிரால் நடுங்கிக்கொண்டிருந்தாள். அவளது கோலத்தைக் கண்டு வேதனைப்பட்ட மந்திரி தான் போர்த்திருந்த சால்வையை எடுத்து அவளுக்குப் போர்த்துவிட்டார்.

இதைக்கண்ட அரசர் திகைப்பும் கோபமும் கொண்டார். அவர் பரிசளித்த விலையுயர்ந்த சால்வையை மந்திரி ஓர் ஏழைக் கிழவிக்குக் கொடுத்துவிட்டது. அரசரின் மனத்தை மிகவும் பாதித்தது. அவர் கோபத்துடன் அரண்மனைக்குச் சென்றுவிட்டார்.

தன் செயல் அரசருக்குக் கோப மூட்டியதால்., கவலைகொண்ட தேவி உபாசகரான மந்திரி அம்பிகையைத் தியா னித்து, தன் மனக்கவலையை அவளிடம் அர்ப்பணித்துவிட்டு படுக்கைக்குச் சென் றார்.

மறுநாள் காலை மன்னர் கோவி லுக்கு வழிபடச் சென்றார். அம்பிகையின் முன் நின்று வணங்கத் தொடங்கிய அவர் திகைத்துவிட்டார். மந்திரி ஏழை வயோதி பப் பெண்ணுக்குப் போர்த்த அதே சால்வை அம்பாள்மேல் போர்த்தப்பட்டிருந் தது. அவளும் தானும் வேறல்ல என்பதை அம்பிகை உணர்த்திக்கொண்டிருந்தாள். அரசர் தன் தவறை உணர்ந்து மனம் வருந்தினார்.

நாமும் இக்கதை கூறும் கருத்தை உணர்ந்து அதனை வாழ்விற் கடைப் பிடித்து வாழ்வது அவசியமாகும்.

## வாசகர் உள்ளத்திலிருந்து

மிகவும் சிறப்போடும் புகழுடனும் வெளிவரும் பேரவையின் ஞானச்சுடர் மலரில் சந்தர்ப்பசூழ்நிலை காரணமாக சில தவறுகள் ஏற்படவாய்ப்பு உண்டு. அப்படியான ஒருதவறு 2006 ஆவணிமாத ஞானச்சுடரில் ஏற்பட்டுள்ளதை மிக வருத்தத்துடன் தங்கள் கவனத்திற்கு அறியத்தருகின்றேன்.

"இந்துமதப் பண்பாட்டில் விநாயகவழிபாட்டின் முக்கியத்துவம்" என்ற கட்டுரையில் பக்கம் 27,28இல் "ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை.." என்ற செய்யுள் ஔவையார் பாடியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இச்செய்யுள் திருமந்திரத்து காப்புச் செய்யுள் என்பதை குறிப்பிட விரும்புகின்றேன்.

*தி. செ. இராஜா*

"மேற்படி தவறினை வாசகர்கள் திருத்திப்படிக்கவும்"

**செயலிலும் பயனுடைய செயலையே செய்யவேண்டும்.**

உ

# நெஞ்சக் கனகல்

திரு ச. லலீசன் அவர்கள்

'நெஞ்சக் கனகல்லும் நெகிழந்துருக' என்பது அருணகிரியார் நல்கிய கந்தரநுபூதியின் காப்புச் செய்யுளின் முதலடி. கல்லாகிக் கிடக்கும் நெஞ்சைக் கசிந்துருகச் செய்யும் உத்தியை அறிந்தவர் அவர். நெஞ்சம் என்பது கல்தானா? கேள்வி பிறக்கிறது. வெவ்வேறு அறிஞர்கள் கண்டு நயந்தவற்றைச் சிந்திக்கும் போது அவ்வுண்மையை நயந்து, ஏற்றுக்கொள்ள முடிகிறது.

'கல்' என்பதற்கு மலை எனும் பொருள் உள்ளது. கருணைப் பிரகாச சுவாமி, காஞ்சி குமாரசுவாமி தேசிகரது மகன். இஷ்டலிங்க அகவல், சீகாளத்திப் புராணம் முதலியவற்றை இயற்றியவர். தன் மனத்தில் முருகன் வீற்றிருப்பதற்கான காரணத்தைக் கற்பிக்கிறார்.

"ஆகா! என்மனத்தில் முருகன் நீக்கமற நிறைந்திருக்கிறான். முருகன் விரும்பி உறையும் கற்களில் (மலைகளில்) இதுவும் ஒரு கல் (மலை) என்று மயங்கி நினைத்து என் நெஞ்சக் கனகல்லில் முருகன் வீற்றிருக்கிறான் போலும்" என அருமையாகப் பாடுகிறார்.

"வளர்செழுங் குருதிச் சூட்டு வாரணம் வலனு யர்த்த
ஒளிகெழு பரிதி வைவேல் ஒருபெருங் கருணா மூர்த்தி
களிகெழு சிறந்து தான்வாழ் கற்களில் ஒருகல் என்றோ
அளியஎன் மனத்தி னுள்ளும் அகன்றிலன் இருக்கும் மன்னோ!"

(சீகாளத்திப் புராணம்)

நெஞ்சின் இளகாத் தன்மையைக் கண்டுதான் தாயுமானவரும்

"கல்லேனும் ஐயஒரு காலத்தில் உருகும்என்
கல்நெஞ்சம் உருக இலையே"

என வருந்துகிறார்.

எனவே, நெஞ்சம் உருகவேண்டும் இளகவேண்டும் எனின் இறைவன் திருவருள் கைகூடவேண்டும் என்பது பெறப்படுகிறது.

திருவாசகத்தில் நெஞ்சத்தைக் 'கல்' எனக் கருதி மணிவாசகர் குறிக்கும் இடங்களை நினைத்துப் பார்ப்பது பொருத்தமானது.

"கல்நார் உரித்தென்ன என்னையும் தன் கருணையினாற்
பொன்னார் கழல் பணித்து ஆண்ட பிரான்"

- திருத்தெள்ளேணம்,09

"கல்நார் உரித்தென்னை ஆண்டு கொண்டான்"

- திருப்பூவல்லி,09

நமக்கு முக்கியமானது அன்புதான்.

"கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை"

- திருவம்மானை,05

மணிவாசகருடைய உள்ளத்திலும் நெஞ்சம் என்பது கல்லே என்ற அநுபவஞானம் வெளிப்பட்டு நிற்கிறதல்லவா?

திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை மிகப்பெரும் தமிழறிஞர்களுள் ஒருவர். கல்லாகிக் கிடக்கும் நெஞ்சத்தில் இறைவன் எப்படி அமர்வான்? என ஏங்கித் தவிக்கிறார். எவ்வாற்றாலும் இறைவனைத் தன் நெஞ்சத்தில் இருத்திவிட வேண்டுமென்பது அவரது அவா. அதற்கோர் உபாயம் கற்பிக்கிறார். அவர்தம் நயக்கத்தக்க உபாயத்தைக் காண்போம்.

"இறைவா! உன்னை ஒரு குறையும் இல்லாதவன் எனப் பெரியோர் கூறுவர். ஆயினும் ஒருகுறை உன்னிடத்தில் உள்ளதே! அக்குறையை நீக்கும் வழியை அடியேன் கூறுகிறேன் கேள்!" பீடிகை போடுகிறார் புலவர்.

இறைவனிடம் புலவர் காணும் குறைதான் என்ன?

"இறைவா! உனது முற்புறத்தில் தழும்பு இருக்கிறது. பிற்புறத்தில் தழும்பு இருக்கிறது. தலை உச்சியில் தழும்பு இருக்கிறது. ஆனால் அடியில் (பிருடத்தில்) மாத்திரம் தழும்பு இல்லையே?" எனப்பெரும் குறை ஒன்றைக் காண்கிறார் புலவர்.

புலவர் கண்ட குறைகளுக்கான இலக்கிய ஆதாரங்கள் எவையேனும் உள்ளனவா? என நோக்குவோம்.

காஞ்சியில் தேவி இறைவனைப் பூசித்தாள். அவள் இறைவனைத் தழுவியபோது அவளது முலைச் சுவடு (தழும்பு) இறைவனின் மார்பில் (முன்புறத்தில்) பதிந்தது. இதனை **"ஒருத்திதன் இளமுலைச் சுவடு தோமுறக் கொண்டாய்"** என்ற சித்தர் பாடலடி மெய்ப்பிக்கிறது.

இறைவனின் பிற்புறத்தில் தழும்பு ஏற்பட்ட செய்தியை யாவரும் அறிவர். பிட்டுக்கு மண்சுமந்த போது பாண்டியன் அடித்த பிரம்படியால் அத்தழும்பு உண்டானது. **"அக்கோவால் மொத்துண்டு புண்சுமந்த பொன்மேனி"** எனத் திருவாசகத்தில் திருவம்மானையில் மணிவாசகர் குறிப்பிட்டுள்ளார்.

இறைவனின் உச்சியில் உள்ள தழும்பு அருச்சுனன் அடித்த அடியால் ஏற்பட்டது. தவஞ்செய்திருந்த அருச்சுனன், இறைவனுடன் போர் புரிந்த போது இச்சம்பவம் நேரிட்டது **"வரிவிற் கழுந்துகொடு மாமுடியின் மோதுமுன்"** என்பது வில்லிபாரதத்தில் உள்ள பாடலடி.

மேற்கண்ட வகைகளால் இறைவனின் முற்புறம், பிற்புறம், உச்சி என முப்புறங்களில் தழும்புகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்ளமுடிகிறது. அடியில் தழும்பு இல்லாத குறையைப் போக்க வியப்பூட்டும் யோசனை ஒன்றைக் கூறுகிறார் புலவர்.

"வாட்போக்கி ஈசா! நீ எனது கரடு முரடான மனம் (நெஞ்சு) என்னும் கல்லில் வந்து அமருவாயாகில் உனது அடியில் தழும்பு இல்லாத குறை போய்விடும்" என்கிறார்.

**நாகரிகம் என்பது மனப்பண்பாட்டையே குறிக்கும்.**

ஆரிய தேசத்து மன்னனைச் சிவபிரான் நீரால் மயக்க அவன் வாளால் வீசினன். அந்த வாளைப் போக்கி அவனுக்குக் காட்சி தந்து அநுக்கிரகித்ததால் சிவனுக்கு வாட்போக்கி என்ற பெயர் ஏற்பட்டது. புலவரின் அழகிய பாடலைக் காண்போம்.

“தழுவுமையால் முன்னும், தமிழிறையாற் பின்னும்
தொழுமிறையால் மேலும் சுவடு - கெழுமுவ, கீழ்
இன்றால் எனும் குறைபோம் என்மனஞ்சேர் வாட்போக்கி
அன்றால் அமர்ந்தாய் அடி”

(வாட்போக்கிக் கலம்பகம்)

“நெஞ்சக்கனகல்” என்ற தொடருக்கு மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் கண்ட விளக்கத்தைப் பொருத்திப் பார்ப்பது களிப்பைத் தருகிறதல்லவா?

தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| சிவதொண்டன் நிலையம் | யாழ்ப்பாணம் | 3மூடை அரிசி 2புட்டி பருப்பு |
| குகன் ஸ்ருடியோ | பருத்தித்துறை | 1000. 00 |
| குட்டிராசா நகுலேஸ்வரன் | வல்வெட்டித்துறை | 7000. 00 |
| திருமதி மீனாவதி சர்வானந்தசிவம் | வல்வை | 5000. 00 |
| இரத்தினம்மா வேலுப்பிள்ளை | வல்வை | 1000. 00 |
| கு. ரங்கநாதன் பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி | இணுவில் | 5000. 00 |
| ஞானேஸ்வரி பத்மநாதன் | | 2100. 00 |
| க. கமலக்கண்ணன் கொம்மந்தறை | வல்வை | 5000. 00 |
| சி. கிருபாகரன் சிவசக்திகோவிலடி | அச்சுவேலி | 10,000. 00 |
| A. சுவேந்திரன் | சிறுப்பிட்டிதெற்கு | 1மூடைஅரிசி |
| வைரமாளிகை கன்னாதிட்டி | யாழ்ப்பாணம் | 5மூடை அரிசி 25தேங்காய் |
| சேகர் குடும்பம் | உடுப்பிட்டி | 1மூடைஅரிசி |
| மு. ஞானவேல் சுழிபுரம் | (கொழும்பு) | 7000. 00 |
| S. செல்வரத்தினம் சுழிபுரம் | (கொழும்பு) | 3000. 00 |
| K. கனகசபேசன் குடும்பத்தினர் | கனடா | 46,600. 00 |
| சி. சிவலோகம் ஆசிரியர் | இமையாணன் | 1000. 00 |
| திருமதி இ. செல்வராசா | | 500. 00 |
| லவன் ஞானகுரு | | 10,000. 00 |
| N. ஜவகர்லால்நேரு குடும்பம் | லண்டன் | 20,000. 00 |
| வெங்கடேஸ்வரா கஸ்தூரியார் வீதி | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| Dr.R. பாக்கியநாதன் | திருநெல்வேலி | 2000. 00 |
| சாந்தி புடவையகம் நவீனசந்தை | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| T. தியாகலிங்கம் (S.V.M) | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |

(தொடரும்...

உ

(தொடர்ச்சி...



# அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்...

செல்வி தி. வரதவாணி அவர்கள்

அருள்மிக்கோர் பேசும் பேச்சில் படைக்கும் படைப்புகளில் அழகிருக்கும் ஆழம் இருக்கும் நுணுக்கம் இருக்கும். அத்தகைய அழகு, ஆழம், நுணுக்கம் நிரம்பப் பெற்ற அருட்கவி ஐயாவினது படைப்பில் இலக்கிய வரிசையில் முன்னைய பகுதியில் இடம்பெற்றுள்ள சில சமயவிழுமிய நெறிகளைப் பற்றிப் பார்த்துக் கொண்டோம். அதனைத் தொடர்ந்தும் பார்த்துக்கொண்டால் ஆத்மாக்கள் ஜீவாத்மா, பரமாத்மா என்னும் இருவகை ஜீவாத்மாக்களாகிய எம்மை பரமாத்மா என்னும் இறைவனுடன் ஒட்டவிடாது பிரித்திருப்பவை. மும்மலங்கள் என்னும் ஆணவம், கன்மம், மாயை என்பவையேயாகும். இம்மூன்று மலங்களைப் பற்றியும் மிகச் சிறப்பான விளக்கங்களை இவரது பாடல்களில் நாம் கண்டறியலாம். குறிப்பாக வினைபற்றியும் அதன் செயற்பாடு பற்றியும் கூறவந்த புலவர்.

"முந்தை வினையினிலையறி யோம்.
மூண்ட பிறவித் துயராழி"

அதாவது முன்பு நாம் அறியாமல் செய்த வினையின் பயனாலே பிறவி என்னும் துயரக்கடல் உருவாகிறது என்கிறார். இதிலிருந்து பிறவி என்பது துன்பங்கள் நிறைந்த ஆழம் கண்டறியாத கடல் எனவும், அப்பிறவிக்குக் காரணம்தான் முன்பு நாம் செய்த வினையே என்கிறார்.

இத்தகைய வினை நல்வினை, தீவினை என இரண்டுவகை. இத்தகைய இரண்டு வினைகளையும் எவ்வளவு செய்தோமோ அதற்கு ஏற்ப பிறவிகள் நீண்டு செல்லும் என்பதையே

"எத்தனை பிறவிகள் லுறுவேனோ
எத்தனை இருவினை புரிவேனோ"

என்று விளக்கம் தருகிறார் வினைக்கு.

"எழுமாபவ வினைமூடிய கடையேனை
இமைநேரமு முருகாவென நினையேனை
வழுமாயையி னிடைமூழ்குறு கொடியேனை
மருவேறிய விருதாள்பெற வருள்வாயே"

ஏழ்பிறப்பு எனும் வினை (கன்மம்) மூடிய கடையேனை இமைக்கு நேரம் தானும் முருகா என நினையாத எனை (ஆணவம்) கொடிய மாயையில் மூழ்கித் திரியும் கொடியேனை (மாயை) மருவேறிய முருகா உனது இருபாதம் தந்து அருள்புரிவாயே என்று மும்மலவினைகளைப் பற்றியும் கூறி அவற்றில் மூழ்காவண்ணம்

**வறுமையே பாவங்கள் எல்லாவற்றிலும் பொல்லாதது.**

எனக்கு உன் இரு மலரடியையும் தரவேண்டும் என்னும் பதமலரை நாடும் பாங்கு இவரது பாடல்களில் அமைந்துள்ளது.

"புமியதனி லெனதுநில
மெனதுநிதி யெனதுமக
வெனதுமனை மனைவியுற
வினிய குல முயர்பதவி
யெதைதிப னாலுமே - யென்று பேசி

அதாவது நான் எனது என்பவை ஆணவத்தின் அடிப்படை இவற்றுக்கு வரைவிலக்கணம் மேலேதருகிறார். இதனால் நிலையற்ற நீர்க்குமிழி போன்ற இவ்வுலக வாழ்வுக்காய் எவ்வளவு சமயநெறியிலிருந்து விலகுகிறோம் என்பதை அடுத்த வரியில்

"புனலிலெழு குமிழியென
நினைவதிக புகழைமன
மெழுதிவனி தையர் கொடுமை
படு கொலைகள் சமயநெறி
தவறுமிழி வாயபா - வங்களாலே

இத்தகைய செயன்முறையால் எமக்கு யாது நேரும் என்பதனை,

"அமையுமுட னிலைதளர
வதிகபண வசதியற
அயலினமு மெதிர்புரிய
அடு கொடிய பிணிதொடர
அணைதுணைக ளாருமே - மெய்திடாதே.

இவ்வாறு அவதியுறும் எமக்கு தீர்மருந்து எதுவெனில்

"அவதியுறு துயரகல
அறுபடையி னினதெழிலை
அனுதினமு மகநிறுவ
அருணதள மலரடியி
னருளமுத ஞானவாள் - தந்திடாயோ.

அவ்வாறு தீர்மருந்தாம் இறையருள் பெற்ற நாம் பெறும் பேரானந்தத்தை அளவிடமுடியாத தன்மையை இசையின் இன்பச்சொற் கட்டுக்கள் மூலம் நாசுக்காகப் புலப்படுத்தி நிற்கிறார்.

"திமிததிமி திமிதிமிதி
திகுததிகு திகுதிகுண
தகதண தகுததகு
டட டடண டிடி டிடிண
டகு டகுண தாளமே - ளங்களோடே

**ஆராயாமல் ஒரு செயலையும் செய்யக்கூடாது.**

திகழுமிசை வருவடியார்
பெருமுனிவர் சுரமகளிர்
பொழியவிப முகவரை
னுமைபகவ னயனசைய
வகிலவுல காடுமா - னந்தவேளே.

இவ்வாறு இறையருள் பெறும் பேரானந்தம் பற்றி விளக்குகிறார்.

ஐயா அவர்களது சமய நெறிமையின் ஆழமும் அதன் நுணுக்கமும் அதனைக் கூறும் அழகும் தனியே. அருட்கவிஐயாவின் அருட்புகழ் என்னும் தொகுப்புநூலின் ஒரு பாடலில் இருந்தே நாம் ஒரு மனிதனின் பிறப்பு, வினை அவ்வினையின் பயன், அந்த வினைப்பயனால் ஏற்படும் துன்பத்துக்கான வழி அத்தகைய வழியினைக் கடைப்பிடிப்பதனால் ஏற்படும் இறைஇன்பவாழ்வு என்பதை அறியக்கூடியதாகவுள்ளது. சந்தம் நிறைந்த சந்தப்புலவராய் எமக்கு இலகுவாய்ப் புரிந்துகொள்ளக்கூடிய இலகு தமிழில் விளக்கி சமயவாழ்வுக்கு எம்மையெல்லாம் இட்டுச் செல்வதில் அருட்கவி ஐயாவுக்கு நிகர் அவரே ஆகும். (தொடரும்....

## துயரமதைக் களைவாய்

**பல்லவி :-**
பன்னிரு விழியிருக்க பாலர் நாம் பரிதவிக்க
இன்னமு மிரங்கலையே ஏறுமயில் முருகா

**அநுபல்லவி :-**
நின்னையே சரணமென நித்தமும் நாடும் அன்பர்
முன்னைப் பிணி தீர்ப்பாய் மூவுலகுந் தொழும் தேவா
(பன்னிரு

**சரணம் :-**
மின்னலாய் சரவணையில் பிள்ளையாய் உருவெடுத்தாய்
தன்னிகரில்லையென கார்த்திகையார் வளர்த்தார்
அன்னையாம் அம்பிகையால் அரவணைத்த பாலா
சின்னமாய் வேலதனை தேர்ந்துகை கொண்டவேலா
(பன்னிரு

தேவர்கள் தேம்பியழ தேவகோனை மீட்டு நின்றாய்
தெய்வயானை மனங்குளிர திருமணம் நீ புரிந்தாய்
தினைப் புனத்தில் வள்ளியை திகைக்க வைத்தே மணந்தாய்
திருவருளே தேவா சேவற்கொடிக் காரா
(பன்னிரு

தொண்டை மானாற்றங்கரையினிலே வந்தாய்
தொண்டு செய் அடியார்க்கும் சோதனைகள் தந்தாய்
நொந்து நொந்து பாடும் அன்பர்குறை கேளாய்
சொந்த மண்ணில் காணும் துயரமதைக் களைவாய்
(பன்னிரு

*திருமதி தெ. கிருஷ்ணசாமி*

**அன்பு செலுத்துவது தெய்வத்தின் பண்பு.**

(தொடர்ச்சி...

உ

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்




பூங்காவன உற்சவம் நடைபெற்ற தினமான 01.09.2006 வெள்ளிக்கிழமை வடமராட்சியில் ஊரடங்கு நேரம் பகல் 12.00 மணியுடன் மீண்டும் அமுலுக்கு வருவதாக திடீரென அறிவிக்கப்பட்டதனால் சரியாக 11.50 மணிக்கு பூங்காவனத்திருவிழாவை ஆலயநிர்வாகத்தினர் நிறைவு செய்தனர். அவ்வாறு நிறைவு செய்தவுடன் அயல்க் கிராமங்களில் உள்ளவர்கள் மட்டுமன்றி ஆலயச்சூழலில் உள்ளவர்களும் உடனடியாகவே ஆலயத்தைவிட்டு வெளியேறிவிட்டனர். ஏற்கனவே அன்றைய தினம் வடமராட்சியில் சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றநிலையிலும் ஆலயத்திலிருந்து அடியார்கள் எல்லோரும் வெளியேறிவிட்டநிலையிலும் ஊரடங்கு நிலமையை வெளிப்படுத்தும் வகையில் ஆலயமும் ஆலயச்சூழலும் மிகுந்த அமைதியாகக் காணப்பட்டது.

அதே நேரம் ஆலயத்தில் தமது

கருமங்களை அவசர அவசரமாக முடித்துக்கொண்டு பகல் 12மணியைத்தாண்டிய நிலையில் ஏறத்தாழ 15க்கு மேற்பட்ட பெண்கள் வலிகாமத்திற்கு செல்வதற்காக ஆலயத்திலிருந்து நடந்து வல்லை முச்சந்திக்கு சென்றனர். ஆனாலும் அங்கிருந்த இராணுவத்தினர் அவர்களை வலிகாமத்திற்கு செல்வதற்கு அனுமதியளிக்காத நிலையில் அந்தப் பெண்கள் மிகுந்த களையுடனும், கவலையுடனும் மீண்டும் ஆலயச் சூழலுக்கே திரும்பிவரும் நிலையும் ஏற்பட்டது.

இந்தநிலையில் பிற்பகல் 2.30 மணியளவில் ஆலயத்தில் உள்ளவர்களுக்கு முருகனுடைய இனிய பக்திப் பாடல் எங்கோ தூரத்தில் ஒலிப்பது கேட்க ஆரம்பித்தது. இவ்வாறு தூரத்தில் மெதுவாகக்கேட்ட அந்த பக்திப்பாடல் ஒலி மேலும் மேலும் அண்மையாகக் கேட்கத் தொடங்கி இறுதியில் ஆலயத்தில் நிலவிய அந்த அமைதியைப் போக்குமளவுக்கு மிகவும் பலமாக ஒலிக்கத்தொடங்கியது. ஆலயத்தில் உள்ளவர்களுக்கு உடனே எதுவும் விளங்கவில்லை. எல்லோரும் என்ன விடயமென்பதை உற்றுநோக்கினர். ஆம்! அந்த ஊரடங்கு வேளையிலும் அங்கே உள்ளவர்கள் யாரும் சற்றும் எதிர்பார்க்காத வகையில் பார்ப்போர் உள்ளங்களை உருகவைக்கும் வகையில் பக்தி வெளிப்படுகின்ற ஒரு தூக்குக் காவடியும் அந்த தூக்குக்காவடியுடன் எறத்தாழ 20 அடியார்களும் தமது நேர்த்தியை நிறைவேற்ற ஆலயத்திற்கு வந்துவிட்ட காட்சியைக்கண்டு அனைவரும் அதிசயித்தனர். அங்கே தூக்குக் காவடியை எடுத்த அன்பர் தனது நேர்த்திக்கடனை நிறைவு செய்யும் நிலைக்கு வந்துவிட்ட நிலையில் அகமகிழ்ந்து காணப்பட அவருடன் கூடவந்த அடியார்கள் தூக்குக்காவடியில் வந்த அன்பரை இறக்கி அவரது நேர்த்தியை நிறைவு செய்வதற்கான ஆயத்தங்களை நிதானமாக செய்து கொண்டிருந்தனர்.

பூங்காவனத்திருவிழாவிற்கு ஆலயத்திற்கு வந்த அடியார்கள் பதட்டத்துடனும் பயத்துடனும் ஆலயத்தைவிட்டு அகன்று சென்ற நிலையில் இங்கே இயல்பான முறையில் தூக்குக்காவடி ஒன்று ஆலயத்திற்கு வந்து சேர்ந்ததை வியப்புடன் ஆலயத்தில் உள்ள அன்பர்கள் நோக்கியது மட்டுமன்றி நடந்தேறிய விடயம் பற்றி அதாவது ஊரடங்கு வேளையிலும் அவர்கள் ஆலயத்திற்கு வந்து சேர்ந்த விந்தையை வந்து சேர்ந்த பக்தர்கள் மூலம் அறிந்து ஆனந்தப்பரவசமடைந்தனர்.

அன்றைய தினம் இராணுவத்தினர் வல்லை முச்சந்தியில் மிகவும் கடுமையாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தது மட்டுமன்றி அந்த இராணுவத்தினர் ஆலயத்திற்கு செல்ல வந்த அடியார்களை அங்கே செல்லவிடாது வலிகாமத்திற்கு திருப்பி அனுப்பிக்கொண்டிருந்தனர். இந்த நிலையில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு செல்வதற்காக பக்தி ததும்பும் நிலையில் பக்தர்கள் புடைசூழ நவக்கிரி, புத்தூர் என்ற முகவரியில் இருந்து வந்துகொண்டிருந்த அந்த தூக்குக்காவடியைக் கண்டதும் பொறுப்பாகச் செயற்பட்டுக்கொண்டிருந்த இராணுவத்தினருக்கு திடீரென உள்ளத்தில் கருணை ஏற்பட்டுவிட்டது. பிற்பகல் 12மணியைத் தாண்டி ஊரடங்கு நேரம் அமுலுக்கு வந்த நிலையிலும் கூட அந்த தூக்குக்

காவடியையும் அதனுடன் வந்த அடியார் களையும் ஆலயத்திற்கு செல்வதற்கு அனுமதியளித்தனர். அதுமட்டுமல்ல ஆலயத்திற்கு சென்றுவிட்டு மீண்டும் அந்த ஊரடங்கு நேரத்திலும் திரும்பி வருவதற்கும் சம்மதம் தெரிவித்தனர். இவ்வாறு அனுமதியளிக்கப்பட்டவர்களே அங்கே பிற்பகல் 2.30 மணியளவில் ஆலயத்திற்கு வந்து சேர்ந்தவர்களாவர்.

உண்மையில் பூங்காவன உற்சவத்தை பகல் 12.00 மணியுடன் நிறைவடையச் செய்ய வேண்டியநிலை ஏற்பட்டதனால் ஆலயத்தின் பூசகர்கள்கூட மிகுந்த கவலையுடன் காணப்பட்டனர். இந்த நிலையில் பக்திப்பரவசத்துடன் ஆலயத்திற்கு வந்துசேர்ந்த இந்த தூக்குக் காவடியையும் பக்தர்களையும் கண்டபூசகர்களும் மகிழ்ச்சியும் உற்சாகமும் அடைந்தனர்.

இவ்வாறு உற்சாகமடைந்த பூசகர்கள் சொல்லிவைத்தாற் போல் தூக்குக்காவடி ஆலயத்தை வந்தடையவும் தமது திருவிழா இடைப்பூசைக்குரிய ஆயத்தமணியை ஒலித்து ஆலயத்தில் பூசையை ஆரம்பிக்கவும் நேரம் சரியாக இருந்தது. மேலும் எதிர்பாராத வகையில் இந்த நிகழ்வுகள் ஒரேநேரத்தில் ஆலயத்தில் இடம் பெற்றதனால் ஆலயத்தில் உள்ளவர்கள் மெய்சிலிர்க்கும் நிலைக்கு உள்ளானார்கள். தூக்குக்காவடியுடன் வந்த அன்பர்களும் அந்தப் பூசையில் பங்குகொண்டு பரவசமடைந்தனர்.

இந்தத் தூக்குக்காவடிக்குழுவினர் ஆலயத்திற்கு சென்றபொழுது ஆலயத்தில் உள்ளவர்கள் எவ்வாறு ஆச்சரியப் பட்டார்களோ அதேபோன்று ஆச்சிரமத்தின் சுவாமிகளும் மேற்படி தூக்குக்காவடி எடுத்த அன்பர் சந்நிதியானிடம் ஆழமான பக்தி கொண்டவரும் சந்நிதியானின் அருட்கடாட்சத்திற்குட்பட்ட ஓர் அன்பராகத் தான் இருக்கவேண்டும் என்று தனக்குள் யோசித்துக்கொண்டார்கள். இதனால்த்தான் இவ்வளவு பதட்டமான சூழ்நிலையிலும் சந்நிதியானது திருவடிகளை முழுமையாக நம்பிவந்த இந்த அன்பருக்கு சந்நிதியான் கருணை பொழிந்துள்ளான் என தனக்குள் சிந்திக்கலானார்.

அதே நேரம் ஆலயத்திற்கு தூக்குக்காவடியுடன் வந்துசேர்ந்த அந்தக் குழுவினர் அன்றையதினம் ஆலயத்திற்கு வந்து சேரமுடியாது பலர் பாதிவழியிலேயே திரும்பிச் சென்ற சூழ்நிலையிலும் தாம் ஆலயத்திற்கு வந்து தமது நேர்த்தியை நிறைவேற்றி சந்நிதியானை அவனது இடத்திற்கே வந்து வழிபட்டு விட்டோம் என்ற மனநிறைவுடன் காணப்பட்டாலும் உடனடியாகவே தாம் திரும்பிச் செல்லவேண்டிய நிலையில் பசிக்களையுடன் எவ்வாறு திரும்பிச்செல்வது என்று சங்கடப்பட்டுக் கொண்டிருந்தனர்.

ஆபத்பாந்தவனாகிய அன்னதானக் கந்தன் அந்த அடியார்களது பசிக்கொடுமையை பார்த்துக்கொண்டிருப்பானா? அன்னதானக்கந்தன் இவர்களது பசிப்பிணியைப் போக்க கருணை மழைபொழிந்தான். இங்கே ஆலயத்தில் இந்த அடியார்கள் பசிப்பிணியுடன் சங்கடப்படுவதை சந்நிதியான் ஆச்சிரமத்திற் சுவாமிகள் தமது உள்ளுணர்வால் அறிந்து கொண்டார்கள். இவ்வாறு ஆச்சிரமத்தின் சுவாமிகளுக்கு உள்ளுணர்வு உணர்த்திய நிலையில் ஆச்சிரமத்திலுள்ள தொண்டர் ஒருவரை ஆலயத்திற்கு அனுப்பி அங்கே தூக்குக்காவடியுடன் வந்த குழுவினரது நிலையை ஆராய்ந்தபொழுது உண்மை

யில் அவர்கள் வேறு எங்கேயும் சாப்பாட்டிற்கு ஒழுங்கு செய்யாத நிலையில் எங்கே எப்படி தமது பசியைப் போக்குவது என்று ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்தது தெரியவந்தது. அதே நேரம் இங்கே ஆச்சிரமத்தில் பூங்காவனத்திற்கு வந்த அடியவர்களுக்கு நிறைவாக அன்னதானம் வழங்கிய பின்பும் சரியாக இரண்டு கடகம் சாதமும் அதற்குரிய கறிகளும் மிகுதியாக இருப்பதையும் ஆச்சிரமத்தின் சுவாமிகள் சிந்தித்தபொழுது சந்நிதியானின் திருவிளையாடல் அவருக்கும் வெளிப்பட்டது.

இவ்வாறு தூக்குக்காவடிக் குழுவினருக்கு விஷேட அழைப்பு அனுப்பப்பட்டு அவர்களுக்கென்றே ஒதுக்கி வைத்தது போல அங்கே இருந்த இரண்டு கடகம் சாதமும் அதற்குரிய கறிகளும் அவர்களுக்கு சிறப்பானமுறையில் பரிமாறப்பட்டன. அவ்வாறு பசியாறிய அந்த் அடியார்கள் சந்நிதியானது கருணையினால் தாம் ஆலயத்தை அடைந்தது மட்டுமன்றி தற்பொழுது தாம் பசிக் களையுடன் செல்லக்கூடாதென்பதற்காக அன்னக்கந்தனாகிய சந்நிதியான், சந்நிதியான் ஆச்சிரமத்தின் மூலம் தமக்கு உணவு வழங்கிய அற்புதத்தையும் எண்ணி அளவில்லா ஆனந்தமடைந்தவாறு பிற்பகல் 3.30 மணிக்கு தமது சொந்த இடமான புத்தூருக்கு திரும்பிச் சென்றனர்.

இதேபோன்று அதேதினம் அச்சுவேலியைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் பாற்செம்பு எடுத்தவாறு தனது நேர்த்திக் கடனை நிறைவேற்ற வந்துகொண்டிருந்த பொழுது வல்லையிலுள்ள இராணுவத்தினர் இவரைமட்டும் அனுமதித்து கணவனையும் இவரது குழந்தையையும் திருப்பி அனுப்பிவிட்டனர். வேறுவழியின்றி ஏனைய பெண்களுடன் ஆலயத்தை வந்தடைந்த அந்தப்பெண் தனது நேர்த்தியை மனநிறைவுடன் நிறைவேற்றி முடித்தாலும் மறுநாளும் முழுமையான ஊரடங்கு அமுலில் இருந்தமையால் அவர் ஆலயத்திலேயே தங்கவேண்டி ஏற்பட்டது. தனது குடும்பத்தை பிரிந்திருந்தது அவருக்கு கவலை அளித்தாலும் சந்நிதியில் தங்கியிருந்த இரண்டு நாட்களும் ஆலயத்தில் இடம் பெற்ற பூசைகள், அபிஷேகங்கள், சண்முக அர்ச்சனை மற்றும் கையிலாய வாகனத்தில் எம்பெருமான் வீதிஉலாவந்த காட்சி உட்பட எம்பெருமானுடைய எழில் கோலங்களையும், சிறுமிகள் விளக்கு எடுத்தல்போன்ற சடங்குகள் சம்பிரதாயங்களை எல்லாம் மிகவும் ஆறுதலாகவும் அருகில் இருந்தும் நின்மதியாகவும் நிறைவாகவும் காணுகின்ற சந்தர்ப்பங்கள் ஏற்பட்டமை அவருக்கு ஓர் புது அனுபவமாகவே இருந்தது. இவ்வாறு ஆனந்தத்தால் பிரமித்துப்போன அந்த அம்மையார் இந்த நெருக்கடிகள் மத்தியிலும் தான் தனது நேர்த்திக் கடனை நிறைவேற்ற சந்நிதியான் கருணை பொழிந்த அதே நேரம் ஆலயத்தில் தன்னை தங்கவைத்து இந்த ஆனந்தமான காட்சிகளை எல்லாம் காணவைத்த அற்புதத்தை அங்கே உள்ளவர்களுக்கு ஆனந்தக்கண்ணீர் சொரிய வெளிப்படுத்தினார்கள். அது மட்டுமல்ல தான் முற்பிறப்பில் செய்த புண்ணியத்தினாலேயே தனக்கு இந்த பயன் கிடைத்ததென்றும் அவர் எண்ணுகின்றார். ஆம் அவன் இருக்கும் இடத்தில் இருப்பதும் அவனது எழில் கோலங்களைக் காண்பதும் அவனை உள்ளம் உருகி வழிபடுவதுமே அவனது அடியார்களுக்கு ஆனந்தம் என்பதை

**கோபத்தோடு எழுந்திருப்பவன் நட்டத்தோடு உட்கார்வான்.**

அவனது உண்மையான அடியார்கள் அனுபவத்தால் உணர்ந்துள்ளனர். இதற்கு இந்த அம்மையாரின் அனுபவமும் ஓர் உதாரணமாக உள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பூசகர்கள் இந்த ஆலயம் தொடர்பாக கொண்டிருக்கின்ற பற்றுறுதியே ஆலயத்தின் உற்சவம் முழுநிறைவாக முற்றுப்பெற்றதற்கு முக்கியகாரணம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். முக்கியமாக இந்த வருட உற்சவ உரிமையாளராகிய ஆ. சிவசண்முகஐயர் அவர்கள் சந்நிதியான் மீது கொண்டுள்ள ஆழமான பக்தியும் அதேநேரம் உற்சவகாலத்தில் சந்நிதியான் தோன்றாத்துணையாக இருந்து தம்மை வழிப்படுத்துவான் என்று நம்பிக்கையுடன் உற்சவ ஆரம்பம் முதல் அவர் செயற்பட்ட விதத்தையும் இவ்விடத்தில் நாம் சுட்டிக்காட்டுவது பொருத்தமானது.

இரவு ஊரடங்குசட்டம் அமுலில் இருந்த பொழுதும்கூட கொடியேற்ற உற்சவம் இரவு 1.30மணிக்கு இடம்பெற்றது முதல் இறுதியாக பூக்காரர் திருவிழாவரை எம்பெருமானுடைய வீதி உலாக்கள் மற்றும் தேர்த்திருவிழா தீர்த்தத்திருவிழா என்பன எல்லாம் வழமைபோலவே இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருந்த பொழுது சிலநாட்கள் முழுமையாக ஊரடங்குச்சட்டம அமுலில் இருந்த நிலையிலும்கூட இங்கே சந்நிதியானது திருவிழாச்செயற்பாடுகள் எல்லாம் வழமை போலவே இடம்பெற்றுள்ளன.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் மருதர் கதிர்காமர் பரம்பரையில் தொடர்ந்து பூசைகளை மேற்கொண்டு வருகின்ற இந்த பூசகர்களும் இதற்கு உதவியாகச் செயற்படுகின்ற பூக்காரர்களும் உற்சவம் தொடர்பான தமது கைங்கரியங்களை சந்நிதியானது காரியமாகவே எண்ணி பயபக்தியுடன் . செயற்படுத்தும் பொழுது சந்நிதியானது திருவருள் அவர்களுக்கு கிடைக்காமலா போகும்.

ஓம் முருகா!

## கல்விவழி கவலை அற்றது

ஒரு ஏழைக் குழந்தைக்குக் கல்விதானம் புரிந்து விட்டால், அவன் வாழ்நாள் முழுவதும் உண்டு உடுத்து உவகை உறுவான். அப்புண்ணியம் அவனைப் படிக்க வைத்தவனுக்கு உண்டு. அறிவு தானத்திலும் மிஞ்சிய தானம் கிடையாது. நம் வீட்டுக்கு வந்த ஒருவனுக்கு இரண்டு ரூபாய் பெறுமானமான உணவு தருகிறோம். அந்த உணவு ஐந்துமணி நேரத்தில் செரித்து விடுகிறது. ஒரு ரூபாய்க்குச் சிறந்த அறிவு நூலை ஒருவனுக்குத் தந்தால், மூன்று தலைமுறைக்கு அந்த நூல் வழிகாட்டும். பிழைகளுக்கெல்லாம் தலையாய பிழை அறிவு நூலைக் கல்லாததுதான். அதனால் தான் பட்டினத்து சுவாமிகள் "கல்லாப் பிழையும்" என்று பாடியருளினார். "அறிவுநூல் கல்லா மூடர்" என்கிறார் அருணகிரிநாதர். ஆகவே குழந்தைகளைப் படிக்க வையுங்கள்.

பழிக்குப் பழிவாங்குவது கொடிய செயல்.

உ

# கார்த்திகைமாத வாராந்த நிகழ்வுகள்

03-11-2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

திருப்புகழ்மன்ற அங்குரார்ப்பண நிகழ்வு

திருப்புகழ்இசை - சி. செல்வரட்ணம் குழுவினர்

---

10-11-2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:- இதிகாசம் சொல்லித்தந்த வாழ்க்கை**

**வழங்குபவர்:-** சொல்அருவி க.ஜெசிந்தன்

---

17-11-2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:- பெரியபுராணம் (தொடர்)**

**வழங்குபவர்:-** அ. குமாரவேல் (சிரேஷ்ட விரிவுரையாளர்)

(யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

24-11-2006 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 107ஆவது மாத வெளியீடு

## கார்த்திகை 2006

வெளியீட்டுரை:- இ. சண்முகசுந்தரம்

(ஆசிரியர்)

மதிப்பீட்டுரை:- பேராசிரியர் அ. சண்முகதாஸ்

(யாழ் பல்கலைக்கழகம்)

# செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள்
# 2006

ஏப்ரல்
01.04.2006 பங்குனி 18 சனி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்
11.04.2006 பங்குனி 28 செவ்வாய்
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமான் கும்பாபிஷேக தினம்
14.04.2006 சித்திரை 1 வெள்ளி
மங்கள இந்துப் புதுவருடப் பிறப்பு
மாலை விஷேட உற்சவம்
29.04.2006 சித்திரை 16 சனி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்

மே
12.05.2006 சித்திரை 29 வெள்ளி
சித்திரா பூரணை விரதம்
26.05.2006 வைகாசி 12 வெள்ளி
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்

ஜூன்
09.06.2006 வைகாசி 26 வெள்ளி
வைகாசி விசாகம் விஷேட உற்சவம்
22.06.2006 ஆனி 8 வியாழன்
கார்த்திகை விரதம் மாலை 5மணி
விஷேட உற்சவம்

ஜூலை
02.07.2006 ஆனி 18 ஞாயிறு
ஆனி உத்தரம் பகல் விஷேட உற்சவம்
03.07.2006 ஆனி 19 திங்கள்
தீர்தமெடுப்பு
10.07.2006 ஆனி 26 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
16.07.2006 ஆனி 32 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூஜை
20.07.2006 ஆடி 4 வியாழன்
கார்த்திகை விரதம், விஷேட உற்சவம்
24.07.2006 ஆடி 8 திங்கள்
ஆடி அமாவாசை விரதம்
25.07.2006 ஆடி 9 செவ்வாய்
கதிர்காமம் கொடி
28.07.2006 ஆடி 12 வெள்ளி
ஆடிப்பூரம்

ஆகஸ்ட்
09.08.2006 ஆடி 24 புதன்
கதிர்காமத் தீர்த்தம்
இரவு விஷேட உற்சவம்
16.08.2006 ஆடி 31 புதன்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்
23.08.2006 ஆவணி 7 புதன்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
இரவு கொடியேற்றம்
27.08.2006 ஆவணி 11 ஞாயிறு
காலை திருவிழா ஆரம்பம்

செப்ரெம்பர்
01.09.2006 ஆவணி 16 வெள்ளி
பூங்காவனம்
02.09.2006 ஆவணி 17 சனி
கைலாசவாகன உற்சவம்
05.09.2006 ஆவணி 20 செவ்வாய்
சப்பறம்
06.09.2006 ஆவணி 21 புதன்
காலை தேர்
7.09.2006 ஆவணி 22 வியாழன்
காலை தீர்த்தம்
மாலை மௌனத்திருவிழா
12.09.2006 ஆவணி 27 செவ்வாய்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்
23.09.2006 புரட்டாதி 7 சனி
நவராத்திரி விரத ஆரம்பம்
29.09.2006 புரட்டாதி 13 வெள்ளி
சரஸ்வதிபூஜை ஆரம்பம்

ஒக்ரோபர்
02.10.2006 புரட்டாதி 16 திங்கள்
விஜயதசமி
10.102006 புரட்டாதி 24 செவ்வாய்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்
21.10.2006
ஐப்பசி 04 சனி தீபாவளி
22.10.2006
ஐப்பசி 05 ஞாயிறு கந்த ஷஷ்டி விரதம் ஆரம்பம்
22.10.2006
ஐப்பசி 10 வெள்ளி கந்த ஷஷ்டி விரதம்
மாலை சூரசம்ஹாரம்
28.10.2006 ஐப்பசி 11 சனி
பாரணை இரவு தெய்வானை அம்பாள் திருக்கல்யாணம்

நவம்பர்
06.11.2006 ஐப்பசி 20 திங்கள்
கார்த்திகை விரதம் விஷேட உற்சவம்

டிசம்பர்
03.12.2006 கார்த்திகை 17 ஞாயிறு
திருக்கார்த்திகை விரதம்
குமாராலய தீபம் இரவு விஷேட உற்சவம்
05.12.2006 கார்த்திகை 19 செவ்வாய் விநாயகர் விரதஆரம்பம்
10.12.2006 மார்கழி 10 உதயம் திருவெம்பாவை பூஜாரம்பம்
விநாயகர் ஷஷ்டி விரதம்
31.12.2006 மார்கழி 16 ஞாயிறு
கார்த்திகை விரதம்
காலை 9.00 மணி விஷேட உற்சவம்

சுப மங்களம்
நன்றி